KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஸ்ரீ மார்ச் மீ 21 உ [No. 12

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 177

2. சூளாமணி (இரதநூபுரச் சருக்கம்)
வித்துவான்
T. P. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை M.A. B.L. 179

3. ஒத்தெல்லோ (அங்கம் 1. களம் 3.)
Shakespeare's "Othello" 181

4. வில்லிபாரதம்—(துரியோதனன்)
K. T. விஜயராகவாச்சாரியார் B.A. 184

5. சூரியன் (ஆராய்ச்சிக் கருவிகள்)
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A.,L.T., 185

6. அணியிலக்கணம் (தன்மை அணி) 188

7. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 4-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 189

8. வர்த்தமானம் 192

## க லா நி ல ய ம்

### வழியும் வகையும்

புதிய புதிய வழிகள் கண்டுபிடித்து மனிதரை முன்னேற்றத்திற்கு அற்பணம்செய்தற்கு முயல்கின்ற தலைவர்கள் உலகெங்கும் நாளுக்குநாள் அதிகமாகின்றனர். ஆயினும், உலகெங்கும் மனிதர் நாளுக்குநாள் தம்மைத் தனித்தனி அவலத்திற்கே அற்பணம் செய்துகொள்வதையும், முகத்தில் இரண்டு புண்களின்றிக் கண்கள் இரண்டு உடையவர்கள் எல்லோரும் கண்டுவருகின்றதற்கும் குறைவில்லை. இந்த விபரீதத்திற்குரிய காரணந்தான் யாதுயாது என்று ஆழஆழ ஆராய்ந்து சென்றக்கால், முன்னேற்ற முயற்சிகளினூடு மானுட நடமாட்டத்தின் அந்தத்தில் அரியதொரு இரகசியம் கிடைக்கலாம்.

பிழைக்கும் வழி யெதுவென மிகக் கலங்கி உழைக்கின்ற மனிதருக்கு ஒன்று கூறுவோம். பிழைக்கும் வழியெல்லாம் புகுந்து புகுந்து பார்த்தாகி விட்டது, இனிச் சாகும் வழிதானெதுவெனச் சற்றே சிந்தித்தாலோ! சிறிது பொறுமின்— தற்கொலையே செய்துகொள்ள யாம்இங்கு ஒருவரையும் அழைக்கவில்லை. வாழ்வதற் கஞ்சும் கோழைகள் தம்மைக் கூற்றுவன் கடைத்தெருவில் விற்றுக்கொள்ளும் பேதைமைச் செய்தியாம் அத்தற்கொலை. இக்காலம், தற்கொலை செய்துகொள்ளும்படி தூண்டவேண்டியதும் மிகை. தற்கொலை செய்துகொள்ள விரும்புகின்றவர்களைத் தடுப்பது தருமமாகுமோ என்ற சந்தேகமும் இருக்கின்றது. தூண்டுவதும் தடுப்பதும் எவ்வாறாயினும், [illegible]முடையுயிரைத் தாமேமாய்த்துக்கொள்வதற்கும் போதிய துணிவில்லாமல் தயங்குகின்ற மனிதகோடிகளைமனத்துள்வைத்தே இவ்வாசகம்பேசுகின்றோம்: வர்த்தக விவகார முறைகளில் நம்முடனே பேசி[illegible]டுச் செல்லுகின்றவர் தவிர, நெருங்கிப் பழகுகின்றவர் எல்லாரும், தாம்செத்தால்தானாகாதா என்ற சிந்தனையிற்றானே இருப்பவராக நாடோறும் இரண்டொரு முறையேனும் சொல்லாமல் தீர்வதில்லை. இதுவோ எல்லோர் அனுபவத்திற்கும் ஏற்கும். "இருப்பதோ இறப்பதோ, அதுவே கேள்வி" என்ற நிலையில் நின்ற ஹாம்லட், இக்கால மனிதரைக் கருதுங்கால், மிக்க பாக்கியசாலியாம் என மதித்தல் வேண்டும். ஏனெனில், இப்பொழுது, செல்வக்கடலில் நீந்துகின்றவர் முதல் 'சாக்கடை' நீரில் முழுகுவோர்வரையில், அதுபற்றிக் கேள்வியே இல்லாமற் போய்விட்டதே. இருந்து பார்க்கலாம் என்பதற்கும் இனி வழி காணோம்; சாகவே சம்மதித்திருக்கின்றனர். முன்னே, சாதல் மட்டும் சரதமாகஇருந்தது. இப்பொழுது சாவதற்குச் சம்மதமும் சரதமாகி விட்டது. சம்மதம் சரதமாயினும் துணிவில்லாமையே குறை. சம்மதப்பட்டிருப்பவர் நோய்வந்தக்கால் வைத்தியரைத் தேடுவானேன் என்று வியக்கவேண்டா. பயம் பெரிது; சாகவேண்டாத நிலை பின்னொருநாள் வாய்க்கலாகுமே என்னும் ஒரு ஆசையும் தயங்கலாம். சம்மதப்பட்டவுடனே பயமும் நீங்கிவிடவேண்டும் என்னும் நியதியில்லை. மலையினின்று விழுந்து சாகும் நினைவுடன் ஏறிய ஒருவன், விழுமுன் பள்ளத்தைப் பார்த்து,

"அப்பா, இந்தப் பள்ளம் மிக மிக ஆழம், இதனில் விழுந்தால் எப்படிப் பிழைப்பேன்" என்று பயந்து திரும்பிவிட்டானும். சாவதற்குச் சம்மதம் இருப்பினும், பயமும் ஆசையும் உடன்நிற்கின்ற உளவை, முரணுறப்பேசிய இம்மலைபேறியின் வாசகம் நன்கு தெரிவிக்கின்றது. எனின், சம்மதித்த ஒன்று செய்யப்பெறுவதற்குத் துணிவும் வேண்டும். துணிந்தபின்னரே கடலும் கணைக்கால் ஆழ மாகிவிடும். மற்று, இந்தத் துணிவினைப் பெறுவதே தகுதி என்று வற்புறுத்துவதற்கு இக்கட்டுரை எழுதப்பெறவில்லை. சாக வேண்டுவது சிந்தனையாயின் அதனைச் சாதிப்பதற்கோர் வழியும் சொல்ல வரவில்லை. சிந்தனையும் வழியும் இருப்பினும் அது செய்திடாமைக்குக் காரணம் ஆராய்வதும் இங்கு எம் கருத்தன்று—("பொதுமையின் அதிசயம்' என்னும் தலைப்புடன் இவ்வாண்டு முதலிதழில் வந்துள கட்டுரை அக்காரணத்தை ஒருவாறு குறித்துளது) இந்தத் தற்கொலைச் சிந்தனை இருக்கின்றதே என்பதைத்தான் உட்கொண்டு இரங்குகின்றோம். நம் முன்னேற்ற முயற்சிகளெல்லாம் இந்தச் சிந்தனை பெருகுவதற்கே ஆதாரமாகின்றனவே என்பதை நினைத்துத்தான் வருந்துகின்றோம். முன்னே, "ஊரில் வருகின்ற சாவு உனக்கு வராதா" என்று ஒருவரையொருவர் வைவது சாதாரணமாயிருந்தது. இப்பொழுது, "ஊரில் வருகின்ற சாவு எனக்கு வந்தாலாகாதா" என்று எல்லோரும் தம்மையேவாழ்த்திக்கொள்வது வழக்கமாகிவிட்டது. இந்தச்சிந்தனை இல்லாமற் போவதற்கு வழியு மொன்று இருத்தல் வேண்டும். அதனைக் கண்டுகொள்ளச் சிறிதிங்கு முயலுவோம். சாகும் வகை தெரிந்தால்பின் சாகும்வழி பார்த்திருக்கவேண்டா.

தமிழிற் காண்கிற புறப்பொருள் இலக்கணத்தின் பெரும்பகுதி போரின் திறத்தை மிகமிகப் பாராட்டிப் பேசுகின்றது. போர்வீரத் திறமைப் பாராட்டிப் பேசுவார் பேசுக, மற்று, மானுட இரக்கத்தால் அதன் கொடுமையை நினைத்துக் கடியினும் கடிக; எல்லாக் காலத்திலும் எல்லாத் தேயத்திலும், போர்வீரனது படிவமானது மானுடப் பெருமையின் மிகச் சிறந்த உருவமாக, வித்தகர்களாலும் உத்தமப் புலவர்களாலும் புகழப்பெற்றுவந்திருக்கின்றது. அமைதிக்குளர் அரசனாய் அவதரித்த இயேசுகிறிஸ்துநாதரும், தாம் அமைதியளிக்கப் பிறக்கவில்லை யென்றும், போரின் வாளே கொண்டு புகுந்திருப்பதாகவும் விளம்பியதாகக் கிறிஸ்தவவேதம்கூறும். இது உருவகம் என்பது உண்மையே; ஆயினும்போர்க்கள உருவகமே அமைதியிலுங் கையாளப்பெறுகின்றதென்னின் போர்வீரப் பெருமைக்கு இருந்தமதிப்புஇவ்வளவென்பதுதெரியவரும். காதலர் சேர்க்கையைக் "கலவிப்போர்" என்னுஞ்சொல்லால் நம் தமிழ்ப்புலவர் பேசினர். அகப்பொருள் துறையிலும் இப்படிப் புறப்பொருள்வந்து படிகின்றது. இந்தியர் தமது தனிமுதல் தெய்வங்களாக வணங்குகின்ற சிவபிரான் திருமால் கந்தன் அனைவரும் போரில் வென்றுபெற்ற பெருமை சான்றவர். எமதன்னையாம் பார்வதிதேவியும் மகிடாசுரனுக்கெதிர் போர்க்களம் புகநேர்ந்தனள். நான்முகன் ஓயாமல் வேதம் ஓதுவதன்றிப் போரொன்றும் புரிந்திலனாதலின் அவனுக்கு இப்பேருலகில் ஒருகோவில் இல்லாமற்போய்விட்டது போலும்.

காதலிலும் கடவுட் சமயத்திலும் இவ்வண்ணம் போர்வீரப் பெருமை கலந்து விளங்குவதற்குக் காரணம் என்ன? போர்கொண்டெழுவதெல்லாம் ஒன்றினை அழிப்பதற்கே யன்றி வேறன்று. போர்க்களம் புகுகின்ற வீரன் ஒவ்வொருவனும், தன்னால் எத்தனை பேரைக் கொல்லமுடியுமோ அத்தனை பேரைக் கொல்லவேண்டுமென்னும் நோக்கமுடையவனாக இருக்கின்றான். இவனுடையநோக்கத்திற்கு இலக்காயிருப்பவனும் இவனைப்போன்ற வொரு மனிதனே; இவனுக்கு எவ்வகைத்தீங்கும் இழைத்தவனல்லன்; அவனைக்கொல்வதால் இவனுக்கு எவ்வகை இலாபமும் இல்லை. இப்படிக் கருத்தற்ற கொலைபுரியக் கைகள் துடிக்கும் ஒருவனது வீரத்தை எதுபற்றி உவப்பது, எதுகொண்டு புகழ்வது. ஆயினும், உத்தம வித்தகர்களும் புலவர்களும் பெரியோரும் அதனை உவந்து புகழ்கின்றனரே. மேனாட்டுக்காவியங்களுக்கெல்லாம் மூலநூலென்று கொண்டாடப்படும் ஹோமர் பாடிய 'இலியட்' முழுவதும் போர்வீரப் புகழ்ச்சியேயாம்.

ஏனைய மொழிகள் நிற்க, தமிழ்மொழி நூல்களின் மிகப்பெரும்பகுதி வாளின்மேல் வரும் வீரத்தைமிக மகிழ்ந்து புகழ்வதை அனைவரும் அறிவார். இராமாயணமும் பாரதமும் வீரத்தின் வெற்றியை மிகவும் சிறப்புச் செய்கின்றன. ஜயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணியில், வீரர்போராற்றலும் அவர்செய்யும் போரின் அழிவும் அளவிறந்து காணப்படுகின்றன. சமணத் துறவியாம் திருத்தக்க தேவரும் சிந்தாமணியில் போர்த்தொழிலை மிகுதியும் பாராட்டி யிருக்கின்றார். கொச்சித் திணையில் மகள்மறுத்து மொழிதல் என்னுந் துறையில், ஐயனாரிதனார்,

> ஒள்வாள் மறவர் உருத்தெழுந் தும்பர்நாள்
> கள்வார் நறுங்கோதை காரணமாக்—கொள்வான்
> மருங்கெண்ணி வந்தார் மழகளிற்றின் கோடிக்
> கருங்கண்ணி வெண்கட்டிற் கால்

[முற்றுகையிட்டிருந்த அரசன், மதிலிற் குட்புறநகரில் முற்றுகைப்பட்டிருந்தவருக்குத்தூதுபோக்கி, 'உம்மரசன் மகளை எனக்கு மணம் செய்து தருவீராயின் நான் போர் விட்டுப் போவேன்' என்று உரைக்க அதுகேட்ட அம்மதிலினுள் இருந்த —ஒளிபொருந்திய வாளையேந்திய வீரர் கோபித்தெழுந்து, "முன்னாட்களில், தேனொழுகும் வாசனையுடைய மாலையை யணிந்துள்ள இம்மகள் காரணமாக, இடைப்பின் அழகைக்கருதி இவளைக்கொள்ளவேண்டிவந்த பலஅரசர்களுடைய இளைய யானைகளின் தந்தங்கள்தான் இந்தக்கறுத்தகண்களை யுடையவள் படுப்பதற்குஅமைந்த கட்டிலின் வெண்மையான கால்களாகும், காண்" என்று எதிர்மொழிந்தார்]

என வீரச்சுவை ததும்பும் புறப்பொருள் வெண்பாமாலைப் பாட்டிற்கு இணங்கியே அந்தத் திருத்தக்க தேவரும்,

> உலமரு நெஞ்சி னொட்டா மன்னவ ரூர்ந்தயானை
> வலமருப் பீர்ந்து செய்த மணிகிளர் கட்டில்

எனச் சிங்காதனத்தைச் சிற[illegible]ர். போர்வீரம் எத்துணை புக[illegible]

M211,N28KN
191240



பதைப் புறப்பொருள்வெண்பாமாலைச் செய்யுள்கள் பின்னும் சிலவற்றினுங் காணலாம்.

பகைப்படை வந்ததென அறிந்து, அதனைத் தடுக்கும்பொருட்டு ஊரிலுள்ளோர் படைமுயற்சி செய்யுங்கால்,

> வந்த படைநோனாள் வாயின் முலைபறித்து
> வெந்திற லெஃக மிறைக்கொளீஇ—முந்தை
> முதல்வர்கற் றான்காட்டி மூதின் மடவாள்
> புதல்வனைச் செல்கென்றாள் போர்க்கு

[போர்வீரம் வாய்ந்த பழைய குடியில் பிறந்தவள் ஒருத்தி, தங்கள்மேல் எழுந்துவந்த சேனையைக்கண்டு பொறுதவளாகி, பால்குடித்திருந்த பிள்ளையின்வாயிலிருந்து தன் முலையைப்பறித்து, வீட்டிலிருந்த கொடிய வெற்றியையுடைய வேலாயுதத்தை எடுத்து, முன்புபகைவரைக் குத்தியதால் வளைந்திருந்த வளைவை நிமிர்த்தி, முன்னோர்க்கு நட்டிருந்த நடுகல்லை அப்பிள்ளைக்குக்காட்டி 'நீயும் போரிற்குப் போவாயாக" என்றனள்]

முலைபறித்து ஒரு பிள்ளையைப்போரிற்குப் போக்கும்நெறி நினைக்கத்தகுந்தவீரம் சிறியதன்று. இன்னதோர் வீரத்தினால் இயற்றப்படுகின்ற போரினின்று புகும் அழிவையும் அப்புலவர் மறக்காமல்

> தாழார மார்பினான் றாமரைக்கண் சேந்தனவாற்
> பாழாய்ப் பரிய விளிவதுகொல் - யாழாய்ப்
> புடைத்தேனிமிர்கண்ணிப் பூங்கட் புதல்வர்
> நடைத்தேரொலிகறங்கு நாடு.

[ஆரம் தாழ்ந்த மார்பினையுடைய எம் அரசனது தாமரைபோன்ற கண்கள் சிவந்தன. இனி, யாழைப்போல் பக்கத்தில் ஒலிக்கின்ற வண்டுகள் மொய்க்கும் மாலையை யணிந்த, அழகிய கண்களையுடைய, சிறுபிள்ளைகள் நடைத்தேர் விட்டு விளையாடும் ஆரவாரம் மிகுந்த பகைவர் நாடானது, கண்டவர் இரங்கப் பாழாகிக் கெட்டு அழியும் போலும்]

என்று, பகைவர் தேசம் பாழாவதற்கு இரங்கிக் கொற்றவள்ளையும் பாடுவார். இப்படிஅழிவும் அதற்குரிய இரக்கமும் இருப்பினும் போர்த்தொழிலின் வீரத்தைப் புலவர்கள் மிகமிகப் புகழ்ந்து பேசுவானேன்!

---

# சூளாமணி

[119-வது பக்கத் தொடர்ச்சி]

## இரதநூபுரச் சருக்கம்

110. மகளைக் கருதியே மன்னவன் திருக்கோயிலினுள்ளே புகுந்தமை கண்டோம். அம்மகளே அருகோன்பு நோற்றுத் தன்னெதிர் வந்து போகின்றாள். அவள் மென்மையை நோக்கி "வேறு பல கலன்கள் அணியாது சிலம்பணிந்து செல்க" எனப் பரிந்து கூறுகின்றான். "இவளுக்கு அவ்வணிகலன்கள் அணியாவது என்னை? இவ்வுலகத்திற்கே ஓர் அணிகலமன்றோ இப்பெண்மணி! மண்ணிற் கிடைக்கும் பொருளோ ஈது! மண்ணுலகில் உள்ள பொருள்கள் அனைத்தையும் போரில் வென்று பெறுவதும் மக்களுக்கு இயல்வதொன்றே? நல்லறவழியில் நின்று நல்வினையீட்டி விண்ணுலகச் செல்வத்தைத் துய்ப்பதும்மக்களுக்கு இயல்வதொன்றே? இன்னவாறு பொருட்பேறும் அறப்பேறும் பெற்ற மக்களும், இன்பப்பேறும் இப் பெண்ணருங்கலத்தைப் பெறுதல் இயலுவதொன்றோ? பெறுதல் ஒருபுறம்கிடக்க எண்ணத்தான் இயலுமோ? இவள் அழகும் பெருமையும் இருந்தபடி இதுவே யன்றோ?" என்றெல்லாம் நினைக்கின்றான் அரசன். இத்தகையாளை மனைவியாகப் பெறும்பேறுடையான் யாரோ எனக் கருதுகின்றான்.

111. மஞ்சு தவழ்ந்து அழகூட்டும் இம்மலையில் வாழும் மன்னரோ பலர்; அவர்கள் கல்தோன்றி மண்தோன்றாக் காலந்தொட்டு அரசர் செல்வத்தில் சீரும் சிறப்புமாய் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் பழங்குடியில், கட்டிளமைபெற்ற காளைமார் பலர் பிறந்துள்ளனர். வேலைக் கையிலேந்தி, அதனையே தமக்[illegible]னைக் கொண்டு வாகைமாலை சூடி வருகின்ற[illegible]; அதற்கேற்ப உடற்கட்டும், அதனால் அழகிய[illegible]ும் பெற்றோர்; அவர்கள் வேலும் பயன்படுத்[illegible]தால் மீண்டு விளங்குகின்றது. மெலியார்மேலும் புறங்கொடுப்பார் மேலும் செல்லாது அறத்திற்கே ஊன்றுகோலாய் இன்பம் விளைத்தலின் நல்வேலுமாய் நடுநிற்கின்றது. இத்தகையாருள் இவளுடைய நெய்யணிந்த கூந்தலில் வழுக்கி விழும் மனமுடையானாய் இவளைக் கைப்பற்றி மணக்கக் கூடிய தன்மையான் யாரோ? இவளை மணப்பானது உடலைக் கண்டாலே, அதன் அமைப்பைக்கொண்டே அவன் பேற்றினைக் கண்டறிந்து கூறலாகும். அத்தகைய குறிகளும் அடையாளங்களும் உடலகத்தே விளங்க ஒளிர்பவன் [illegible]த வீரனோ?

112. இவ் வாராய்ச்சியைத் தான் செய்யவேண்டியதன் இன்றியமையாமையைக் கருதுகின்றான் இறைவன். எண்ணே சென்று தானாக ஆராய்ந்து மணமகனைத் தேடப்போவதில்லையே. தந்தைசொற்படி நடக்கத் தன்மகள் உள்ளதை அறிவானன்றோ? ஆகவே தன் தலைமேல் உள்ள சுமை பெரியதொரு சுமையேயன்றோ? பொன்னில் வைத்தற்குறிய ஒப்பற்றதொரு பெரிய மணியை ஈயத்தில் வைத்தழுத்தினால், அம்மணி "யான் ஒளிரமாட்டேன்" என்னுமோ? தம்மோடு குலத்தால் தொடர்பில்லாதவர்க்குத் தம்மைத் தம் பெற்றோர் மணஞ்செய்வித்தால், அம்மங்கையர் என்செய்வர். மாலையோடு துவளுங் கூந்தலையுடைய பெண்கள் துவண்டு வாடுவதன்றி மணம்செய்தமணாளனை மணாளனல்லவென்று மறுக்கவல்லரோ?

113. தம்முடையஉயிரேயனைய தந்தையும்தாயும் தம்மால் இயன்றவளவும் எண்ணிப்பார்த்து ஈதே இவட்கு அழகாவது, என முடிபுசெய்து ஒருவனுக்குத் தம்மை மணம்செய்து கொடுப்பாராயின், அப்பெண்கள், தம்மனத்தால் காதலிக்காத மணாளனையும், நொந்துகொண்டு வெறுத்துரைப்பரோ? தலையெடுத்தே என்றன்றே வாழ்வர்.

114. பெண்மணிகள் நவ்லவர் ஆதலின், துன்பமே உலக இயல்பு என இவ்வாறு வாழ்தல் இயல்பாக லாம். ஆனால் அவர்களை அவ்வாறு அல்லல் வாழ்க்கையில் அலையவிடுதல் அறியாமையேயன்றோ? மனமொத்தபோதன்றோ இன்பம் தளிர்விடுவது ; காதலைக் கொண்டன்றோ காமத்தை அளத்தல்வேண்டும். அக்காதலுண்மையையும் இன்மையையும் எவ்வாறு மூன்றுவது மக்கள் அறிவது? ஆகவே இவளுடைய உள்ளத்தை உணர்தலுக்கான வழி என்ன ? தொல்லாணை நல்லாசிரியர்களின் நூல் வழியே ஆராய்தல் வேண்டும். அத்தகைய நூல்களை ஓதி யுணர்ந்துள்ள அமைச்சரை ஒருங்குகூட்டி அவர்கள் கூறும் முடிபினை ஒட்டி ஒழுகுதலே சிறந்ததாகும்" என ஒரு முடிவிற்கு வருகின்றான் அரசன்.

115. அரசர் வாழ்க்கையை ஆராயுமிடத்து இரண்டுவகைப் புலனுணர்வுகள் அவர்களுக்கு உண்மை விளங்குகின்றது. தம் பொறிகளாலும் அறிவாலும் கண்டு உணர்வது ஒன்று; பிறர் கண்ணும் அறிவும் கொண்டு கண்டு உணர்வது மற்றொன்று. முன்னையது தம்மால் எழுவது; பின்னையது அமைச்சர் "இவ்வாறு செய்க" என்று ஆராய்ந்து முடிபுகட்டிக் காட்டியபோது எழுவது.

116. ஈதென்ன புதுமை? அரசராய் வாழ்கின்றவர் பிறரைநாடுவதோ? ஆம். இயற்கையமைப்பு இவ்வகையே ஒருவரை ஒருவருடன் தொடர்புபடுத்திப் பிணித்து வைத்துள்ளதன்றோ? மிகக் குளிர்ந்த குளத்தில் தாமரை மொக்குவிட்டுப் போதாகின்றது. இம் மண்ணுலகிற்கு எட்டாத விண்ணகத்தே இயங்கும் கதிரவன் வரும்பொழுதேயன்றோ இத்தாமரை மலர்கின்றது. உலகத்துப் பொருள்களில் ஒவ்வொன்றும் இங்ஙனமேபிணைந்து அமைந்துள்ளது. ஈது இயற்கையில் தோன்றும் அருள் நுட்பமாகும். ஈது சிறப்பேயன்றி இழிவல்லவே. தாமரை மலர்ந்தபோதன்றோ சிறந்தொளிர்கின்றது. இவ்வாறு பல உதவியும் புரிவதனாலன்றோ கதிரவனைக் கைகூப்பித் தொழுகின்றது உலகனைத்தும். ஆகவே, நல்வினை யீட்டியதன் பயனைக் கற்பகப் பொதும்பரில் ஆங்கே ஊற்றெடுத்துப் பெருகும் பலவகை இன்பங்களை நினைத்தது நினைத்தபடி விரும்பித்துய்த்து அங்குநின்றும் வெளியேறுவதன்றி என்றும் நிலையாக அங்கேயே வாழும் அரசன் ஒருவன் உளனேல், கண்ணே யனைய கருத்தாற்சிறந்த அறிவுடையாராம்கதிரவர் அவ்வரசனும் தாமரையை மலர்விக்கக் காண்போம். அரசனாதலின் கண்ணே வேண்டா வென்பானோ? கண்ணேயனைய ஆராய்ச்சியாளரை வேண்டா என்பனோ? இயற்கை இன்பம் அறிவாலன்றோ விளக்க முறுகின்றது. ஒருவனது சிற்றறிவினும் பலரதுபேரறிவு பெருவிளக்கங்கொண்டு திகழ்ந்து அழகூட்டி இன்பத்தை வளர்க்குமன்றோ.

117. கருமையே தனக்கோர் இருப்பிடந் தேடி வந்து விரும்பித் தங்கிய நெடுங்கடலிலே கட்டுமரங்கள் செவ்வனே மிதந்து வருகின்றன. ஆனால் அக் கட்டுமரத்திலேறிவருவாருக்குத் துன்பமூட்டுங் குற்றங்கள் தன்னிடத்தே ஒன்றுமின்றி அவர்களுக்கு எதிராகவோ கடுமையாகவோ வீசாமல், இன்பமாக வீசும் காற்றெழுந்து நீரொழுக்கென மெல்ல வீசுமேல், இடையூறின்றி மிகவிரைந்து கரைசேரும் ஆற்றல் பெற்ற அக்கட்டுமரம் காற்றும் வந்து உடன்உதவியதற்குக் கடுகடுத்துநிற்குமோ? இவ்வகையியற்கை அமைப்பை எதிர்ப்பவரும் உண்டோ? வேலேந்தி உலகத்தை அடக்கியாளும் பெருந் திறலுடைய அரசர்கள், நல்லறவழியில் நின்றொழுகித் தாமே உலகை ஆளுந் திறம் பெற்றுள்ளார்களேனும், நூலறிவாற் சிறந்த அறிஞராம் அமைச்சர்களது நுண்ணறிவோடு ஒருங்கியைந்து நடப்பரேல், அரசநெறியாம் கடலின் கரையை மிகமிக விரைவில் முட்டின்றித் தட்டின்றிக் காண்பரன்றோ?

118. ஒருவன் எவ்வளவு சிறந்தவனாலும் தன்னறிவே முடிந்த முடிபெனக் கொள்வதற்கில்லையே. பச்சோந்தியை முன் கண்டவன் அதன் நிறம் செம்மையா மென்றான்; பின்னே கண்டவன் பச்சை என்றான். இவ்விருவரில் எவரைப் பொய் என்பது? ஒருவன் ஒருமனைவி உயிருடன் இருப்ப மற்றொரு மனைவியைமணப்பதுநல்லதே என்பான் அரேபியாவிலும் இந்தியாவிலும்; மேனாட்டான் தீதேஎன்பான். நோய்வாய்ப்பட்டவ னறிவாளனேனும் கன்னல்கைக்கும். நோய்வாய்ப் படாதானுக்கோ இனிக்கும். காலமும் இடமும் உடல்நிலையும் பற்றிப் பற்பலவாறு ஒரு பொருளே தோன்றுகின்றதன்றோ? இம்மாறுட்டத்தினிடையே போராட்டமின்றி வாழவேண்டுமானால், நிலையாக நின்ற அறிவாளர் கண்ட உண்மைகள்தாம் துணை செய்யுமன்றோ? அவ்வாறு எல்லோரும் எப்போதும் எவ்விடத்தும் பிறழாது கண்ட உண்மைகளைத் திரட்டி நூல்களாக வகுத்து வைத்தனர் பெரியோர்கள். தம்முணர்வை இந்நூல்களோடு ஒருங்கு இயைய வைத்து ஆய்ந்த பேரறிஞராம் அமைச்சர்களுடைய கொள்கையையே தக்கதென உலகம் பின்பற்றி அவர்களோடு ஒத்து வாழ்ந்துவருகின்றது.

119. ஆதலின், முன்கூறியபடி கற்பகப் பொதும்பரில் வாழும் அரசனும் தாமரை அமைச்சராம் கதிரவரைக்கண்டு மலர்வதும் இயல்புதானே. அங்ஙனம் அல்லையோ? இந்திரனைப் பார்மின். அவனுடைய வானரசு எங்ஙனம் நடந்துவருகின்றது? ஒருவரோ இருவரோ அவனுக்கு அமைச்சராய் அமைந்தார்? ஆயிரவர் அன்றோ? அவர்களும் உடன் நின்று தாங்குதலால் அன்றோ இந்திரன் விண்ணரசாம் பெருஞ் சுமையை மிக எளிதில் தாங்குகின்றான். அம்மட்டோ? அமைச்சருடைய ஆராய்ச்சிக்கு மந்திரம் என்ற சிறந்த பெயரும் பொருந்தியுள்ளதன்றோ? மந்திரம் அன்றோ அனைத்திற்கும் உயிர்நிலையாய் ஒளிர்வது. அந்தணர் ஒழுக்கமும் நிறைமொழி மாந்தர் ஆணையிற கூறும் மறைமொழியாம் மந்திரமின்றேல் இல்லையாம். அரசர்தம்வாழ்க்கையும் அமைச்சரோடு ஆராயும் மந்திரம் இல்லையேல் இல்லையாம். ஆகவே அரசரென்னும் தாமரையும் அமைச்சராம் கதிரவனெழுந்தாலன்றோ மலர்வதாகும் !

120. இவ்வாறுமுடிந்ததுமுடித்தலாகத் தொடர்ந்தெண்ணிமுடிவுகட்டுகின்றான் அவ்வரசர்பெருமான் தன்னருகே குற்றேவல் செய்வாரை அழைத்து, பிறழாது நிலையாக நின்ற உண்மைகளை விளக்கும் நூலிற்குரிமை பூண்டு நன்னெறி நின்ற அமைச்சர்களிடம் சென்று அவர்களை உடன்கொண்டு வருமாறு ஏவினன். அவர்களும் அமைச்சரிடம் சென்று, அரசன் திருவருள் இருந்தவா றிது எனத் தெரிவிக்கின்றனர்.

இரதநூபுரச் சருக்கம் முற்றிற்று.



# ஒத்தெல்லோ

## ["Shakespeare's —Othello"]

அங்கம் 1. களம் 3.

[154-வது பக்கத் தொடர்ச்சி]

ராடரிகோ:—இயாகோ !

இயாகோ:—யாது சொல்கின்றாய் நீ, பெருந்தகை இதயமே?[1]

ராட:—என்ன செய்வேன் நான் என்று நினைக்கின்றாய் நீ ?[2]

இயா:— ஏன், படுக்கைக்குச் சென்று தூங்குவாய்.[3]

ராட:—இப்பொழுதே நான் நீரில் வீழ்ந்து மூழ்குவேன்.

இயா:— நன்று, நீ அது செய்தால், அதன்பின் நானுன்னை ஒருபோதும் விரும்பமாட்டேன். அசட்டுப் பிரபுவே, ஏனிது?[4]

ராட:— வாழ்வது வேதனையாமெனின் வாழ்தலே அசட்டுத்தனம்; அன்றியும், மரணமே நம் மருத்துவனாகுங்கால் மாள்வதற்கும் ஓர் மருந்துமுறை நமக்குளது.[5]

இயா:— ஹா, அயோக்கியம் [6]! நான்கு முறை ஏழாண்டுகள் நான் உலகத்தை நோக்கியுள்ளேன் [7]; நான், இலாபத்திற்கும் நஷ்டத்திற்கும் வேற்றுமை தெரிந்துகொள்ளக்கூடியவனான காலத்திலிருந்து[8], தன்னையே எங்ஙனம் காதலிப்பதென்பதை அறிந்துகொண்ட ஒருவனை யான் கண்டதில்லை[9]. ஒரு கின்னிக் கோழியின் ஆசைக்காக என்னையே நான் முழுக்கிக் கொள்வேன் என்று சொல்வதன்முன்னம், என் மானுடத்தை ஓர் குரங்குடன் மாற்றிக்கொள்வேனே.[10]

ராட:— என்ன செய்யவேண்டும் நான்? இப்படி அசட்டாசைகொள்வது எனக்கு அவமானமே என்பதை ஒத்துக்கொள்கின்றேன்; ஆயினும், அதனைத் திருத்திக்கொள்வதென்பது என்னுடைய தருமத்தில் இல்லை.[11]

இயா:— தருமமா? அத்திக்காய்![12] நாம் இப்படி அல்லது அப்படி இருப்பது நம்மிலேயே இருக்கின்றது. நம்முடைய உடல்கள் நமது தோட்டங்கள்; அதற்கு நமது சங்கல்பங்களே தோட்டக்காரர்கள். இவ்வாறாதலின், நெட்ல்ஸ் நடவேண்டுமானால் அல்லது லெட்யூஸ் விதைக்கவேண்டுமானால், ஹைஸாப்பை வைத்துத் தைமைப் பறிக்கவேண்டுமானால், ஒருவகைச் செடிகளால் அதனை நிறைக்கவேண்டுமானால் அல்லது பலவகைகளாற் பிரிக்கவேண்டுமானால்; மற்றுச் சோம்பலினால் அதனை மலடாகவோ அல்லது உழைப்பினால் பயிரிட்டோ வைத்திருக்கவேண்டுமா

ஸெனட் சபையினர்களுடன் நகரத்தலைவரும், ஒத்தெல்லோவுடன் டெஸ்டிமோனாவும் போனபின், இயாகோவும் ராடரிகோவும் பேசிக்கொள்கின்றனர்.

(1) 'பெருந்தகைஇதயமே'என்றுஇயாகோ ராடரிகோவைப் பரிகசமாகக் கூப்பிடுகின்றான்.

(2) "டெஸ்டிமோனாவை உன்னுடன் சேர்த்துவைப்பேன்"என்றென்று இயாகோராடரிகோவைவஞ்சித்துக் கொண்டிருந்த செய்தியும், டெஸ்டிமோனா ஒத்தெல்லோவைக்காதலித்து உடன்போயினாள்என்பது தெரிந்தபின் ராடரிகோ இயாகோவை மிக வெறுத்துப் பேசியதும், அன்னதற்கு இயாகோகூறிய அமைதியும், அவ்விருவரும் முதற் களத்தில் பேசியதிலிருந்து தெரியவந்திருக்கும். இப்பொழுது, டெஸ்டிமோனா ஒத்தெல்லோவைமணமும் செய்துகொண்டாகி விட்டபடியால், இனிஅவள் தனக்கு வாய்ப்பதோ இல்லை என்பதுநிச்சயமாகவே, இதன்மேல் தான் தற்கொலை புரிந்துகொள்வதே முடிவு, என்று கூற வருகின்ற ராடரிகோ, அச்செய்தியை இக்கேள்வியின் மூலமாகச் சொல்லத் துவக்குகின்றான்.

(3) இனி நீ படுத்துத் தூங்குவதன்றி வேறு என்ன செய்யக்கிடக்கின்றது—என்னும் இகழ்ச்சிதோன்ற இது இயம்புகிறான். ஏன் - வேறு என்ன செய்யக்கூடும், என்ற பொருளைக் குறிக்கும்.

(4) நீ இறந்துவிட்டால் அப்புறம் நீ இல்லையாகையால் நானும் உன்னை விரும்பமாட்டாதவனாகிவிடுவேன், என்னுங் குறும்பு தோன்ற இவ்வாறு கூறுகின்றான்.

(5) வேதனையுடன் வாழ்வதைக்காட்டிலும் இறப்பதே நலம். மருத்துவன்-வைத்தியன். வேதனை தீரும்படி நாம் மாள்வதென்று துணிந்தபின், தற்கொலை செய்துகொள்ளக்கூடியவழிதானு தென்படாமற்போய்விடும்—என்பது பொருள்.

(6) தற்கொலை செய்துகொள்வது மிகவும்அயோக்கியமான காரியம், என்று பொருள்படும்.

(7) நான்குமுறை ஏழு ஆண்டுகள் - இருபத்தெட்டு வருடங்கள். 'இருபத்தெட்டு வருடங்களாக இவ்வுலகத்தைப் பார்த்துவருகின்றேன்' என்பதால் இயாகோவின் வயது இருபத்தெட்டு என்பது தெரிகின்றது.

(8) இலாபம் எது நஷ்டம் எது என்கிற பகுத்தறிவு என்னிடம் தோன்றியகாலத்திலிருந்து உலகத்தை உற்று நோக்கிவருகின்றேனாலும்,...... கண்டதில்லை—என்று முடித்துக்கொள்க.

(9) தன்னைக் காதலிப்பது - மற்றவரைக் காதலித்து அவர்பொருட்டு நஷ்டமடையாமல், ஆசையையெல்லாம் தன்மீதே வைத்துத் தன்னுடையஇலாபத்தையேதேடிக் கொள்வது. இந்தச் சூழ்ச்சித் திறமை வாய்ந்த ஒருவனை நான் எங்கும் கண்டதில்லை—தன்னுடையஇலாபத்தைத் தேடிக்கொள்ளத் தெரியாத முட்டாள்களாகவே அனைவரும் இருக்கின்றனர்.

(10) கின்னிக்கோழி - ஒருவகைக் கோழி (Guinea-hen) டெஸ்டிமோனாவைக் கின்னிக்கோழி என்று இழிவுறப் பேசுகின்றான்.

ஒரு பெண்ணின்மேல் வைத்த ஆசைக்காகச் சாக நினைப்பதைக்காட்டிலும், குரங்காக மாறிவிடுவதே உத்தமம்—என்பது பொருள்.

(11) என்னுடைய தருமத்தில் இல்லை - என் இயற்கையில் இல்லை. தருமம், என்பதற்கு, அறம் என்பது தவிர இயற்கை என்ற பொருளும் உண்டு.

(12) மாற்றிக்கொள்ள முடியாத இயற்கை யென்பது ஒன்றும் ஒருவருக்கு [illegible] யென்று இயாகோ மறுக்

82
M211,N28kN
N35.8.12
19940

ஞல்; ஏன், இந்த ஆற்றலும் திருத்தக்கூடிய அதிகாரமும் நம்முடைய சங்கல்பத்தில் கிடக்கின்றது[13].நமது வாழ்க்கையென்னும் தராசில், இந்திரிய வாஞ்சையை வைத்துள்ள தட்டிற்குச் சமஇடையாய் நின்று நிறுக்கப் பகுத்தறிவுடைய தட்டொன்று இல்லையாஞல், நம் இயற்கையின் புண்ணீரும் புன்மையும் நம்மை விபரீதம் மிக்க முடிவுகளுக்கு நடத்திச் செல்லும் [14]: மற்று, நமது உக்கிரமான இயக்கங்களையும் நமது தசையின் சுறுக்குக்களையும், நமது கடிவாளமற்ற வேட்கைகளையும் தணிப்பதற்கோ நமக்குப் பகுத்தறிவுளது[15]; காதல் என்று நீ அழைக்கும் இது அதன் ஒரு துண்டு அல்லது கிளையாமெனக் கொள்கின்றேன்:[16]

ராட:—அதுவாக இருக்க இயலாது.

இயா:—இரத்தத்தின் வேட்கையும் இச்சையின் அனுமதியுமேதான் அது[17]; வா, ஆண்மகனுக இரு. முழுக்கிக்கொள்வதா நின்னை! பூனைகளையும் குருட்டுநாய்க் குட்டிகளையும் முழுக்கு; உன்னுடைய நண்பனுக என்னை நான் தெரிவித்துக்கொண்டிருக்கின்றேன்; அழியாத உறுதியுடைய கயிறுகள்கொண்டு என்னை, உன் தகுதியுடன் பிணித்திருக்கின்றேன் என்பதையும் விளம்புகின்றேன். இப்பொழுதைக் காட்டிலும் வேறெப்பொழுதும் நானுனக்கு அதிகம் உதவியாயிருக்க இயலாது. நின் பையினுள் பணத்தைப் போட்டுக்கொள்; இந்த யுத்தங்களைத் தொடர்ந்து வா; அபகரித்த வொரு தாடியால் நின்தோற்றத்தைத் தோற்கடி [18]. சொல்வதைக் கேள், நின் பையினுள் பணத்தைப் போட்டுக்கொள். டெஸ்டிமோஞ அம் மூரனிடத்தில் தன் காதலை அதிகநாள் வைத்திருக்கவேண்டுமென்பது இயலாது— நின் பையில் பணத்தைப் போட்டுக்கொள்—அல்லது அவனும் தனதை அவள்பால் அன்னதே[19]. அவளிலே அது மிக்க உக்கிரத்துடன் துவக்கிபது, அதற்கே உத்தரமான வொரு பிரிவையும் நீ பார்ப்பாய்[20],—நின்பையில் பணத்தைமாத்திரம் போட்டுக்கொள்—மாறும் இயல்பினர் இம் மூரர்—உன் பையைப் பணத்தினுல் நிறைத்துக்கொள்—இப்பொழுது இவனுக்கு லோகஸ்ட்டைப்போல் இனிக்கின்ற இவ் வுணவு இனிச் சிலநாளில், கோலொக்வுன்டிடாவைப் போல் கைப்பதாகிவிடும்[21]. இளமைக்காக அவள் மாறத்தான் வேண்டும் [22]. தெவிட்டியவுடன், அவள் விரும்பி யேற்றுக்கொண்ட தன் பிழையைத்தெரிந்து கொள்வாள் [23]. — மாறுதல் அவளுக்குவேண்டும், வேண்டத்தான் வேண்டும்: ஆதலால், உன் பையில் பணத்தைப்போட்டுக்கொள் ; உன்னையே நீ நாசமாக்

கின்ருன். 'தருமமா' என்று வியப்பது, அப்படி ஒன்றும் இல்லை என்னும் குறிப்புடையது. அத்திக்காய் என்று கூறி ஒன்றினைப் பொருளற்றதென்று இகழ்வது ஆங்கில மரபு; தமிழில், 'மண்ணுங்கட்டி' என்பதை ஒக்கும்.

(13) மாற்றமுடியாதபடி நம்முடையஇயற்கையாக ஒன்றும் இல்லையென்றும், எல்லாம் நம்முடைய இஷ்டத்தில் தான் இருக்கின்றனவென்றும் இயாகோ வாதிக்கின்ருன். தோட்டக்காரன் தனக்கு இஷ்டமான செடிகளை வளர்ப்பதுபோல் நாமும் நம்முடைய வாழ்க்கையில் நமது சங்கல்பத்தின்படி எதனை வேண்டுமாயினும் விலக்கவும் வளர்த்துக்கொள்ளவுங் கூடும்—என்பது கருத்து.

நெட்ல்ஸ், லெட்யூஸ், ஹைஸாப், தைம், என்னும் இவை மேல்நாட்டுச் செடிவகைகள்.

(14) இந்திரிய வாஞ்சை - சிற்றின்ப இச்சை. இவ்விச்சை நம்மை அழுத்துமாஞலும் அதற் கீடான பகுத்தறிவும் இருந்து நம்மை நிமிர்த்தாவிட்டால், நம்முடைய வாழ்க்கை விபரீதமாக முடியும்—என்பது பொருள்.

புண்ணீர்-இரத்தம்: காமத்திற்கு இரத்தத்தின் செழிப்பே காரணமாகக் கருதப்படுகின்றது.

இயற்கையின் புண்ணீரும் புன்மையும் - நமக்கு இயற்கையாயுள்ள இரத்தக்கொழுப்பும் அற்பபுத்தியும்.

(15) இயக்கங்கள் - மனேவிகாரங்கள். தசையின் சுறுக்குக்கள் - காமம் முதலியவற்ருல் உடலில் உண்டாகும் வேதனையின் தூண்டல்கள். கடிவாளமற்ற வேட்கை - அடக்கிச் செலுத்தமாட்டாத சிற்றின்ப ஆசை.

(16) நீ காதல் என்று அழைப்பது அத்தகைய வேட்கையின் ஒருவகையே யன்றி உன்னுடைய இயற்கையோடு இயைந்த ஒன்று அன்று; ஆகையால் அது பகுத்தறிவால் தணிக்கக்கூடியதாம்—என்பது பொருள்.

(17) உன் இரத்தமும் தூண்டுகிறது, மனதும் இசைகின்றது—என்பது பொருள்.

(18) பொய்த் தாடி கட்டிக்கொண்டு உன் அடையாளத்தை மறைத்துக்கொள்—என்பது பொருள்.

(19) ஒத்தெல்லோவும் தன் காதலை அதிகநாள் அவளிடத்தில் வைத்திருக்க இயலாது.

(20) வலிந்துபூண்ட காதல் அது, ஆகையால் விரைவில் அக்காதல் நீங்கிப் பிரிந்தும் விடுவார்கள்.

உத்தரமான - நேரான. காதல் எவ்வளவு உக்கிரமாகத் துவக்கியதோ அவ்வளவு உக்கிரமாகநீங்கவும் நீங்கும்.

(21) லோகஸ்ட் - தித்திப்பான ஒருவகைக் கிழங்கு. கோலொக்வுன்டிடா - கசப்பான ஒருவகைப் பழம். இப்பொழுது கரும்புபோல் இவனுக்கு இனிப்பாயிருக்கின்ற இக்காதல் மிக விரைவில் வேம்புபோல் கசந்துவிடும்.

(22) வயதுசென்ற ஒத்தெல்லோவை அவள் வரவர வெறுத்து இளம்பருவமுடையஒருவனை நாடாமல்இருக்க இயலாது.

(23) ஒத்தெல்லோவின் காதலைத் துய்த்துத் தெவுட்டியபின், இவனை மணந்ததுபற்றி மனம் வருந்துவாள்.

(24) நீ நாசமாய்ப் போகவே துணிந்துவிட்டாயாஞல், முழுகிச் சாவதனினும், டெஸ்டிமோஞவைக் கைப்பற்ற முயன்று, அதனில் வரக்கூடிய ஆபத்தை ஏற்றுக்கொள்வது நல்லதல்லவா—என்பது பொருள்.

(25) ஒத்தெல்லோவும் டெஸ்டிமோஞவும் தாம் தூய காதல் கொண்டிருப்பதாகக் கூறுவதெல்லாம் கபடவேடமே; ஒருவருக்கொருவர் உண்மையாக இருப்பதாக அவர்கள் கலியாணகாலத்தில் செய்துகொண்ட பிரதிக்கினையும் பலமற்றதே. அந்தக் கபடநாடகத் தூய்மையையும் இந்த வலியற்ற சபதத்தையும் நான் என் சூழ்ச்சித் திறமையால் செய்யவல்ல பாதகங்களெல்லாம் செய்து சிதைத்து டெஸ்டிமோஞவை உன்னுடையவளாக்கிவிடுவது இயலக் கூடியதொன்றே யன்றிப் பெரும்பாலும் இயலாமற் போகக்கூடிய தொன்று அன்று—என்பது பொருள்.

நரகர் குலம் - பேய்ச்சாதி. இங்கு, பேய்கள் செய்யவல்ல பாதகங்களைக் குறிக்கின்றது.

புணர்ப்பு - நுண்ணிய புத்தி. வெனிஸ்நகர மாதர், புத்தியின் கூர்மையும் வஞ்சனைச் சூழ்ச்சியும் மிக்கவர் என்று கூறுவர். இது டெஸ்டிமோஞவுக்குப் பொருந்தாது.

(26) நீ தற்கொலை புரிந்துகொள்வதாகக் கொண்ட எண்ணத்தைப் பெருவாரிநோய் கொண்டுபோகட்டும், (அதாவது)அந்த எண்ணத்தை அறவே விட்டுவிடு—என்பது பொருள்.



க் கொள்ளத்தான் வேண்டுமாஞல், முழுகுவதனிம் மென்மையான வழியாக அதனைச் செய் [24]. ன்ஞல்கூடிய பணத்தையெல்லாம் செய்துகொள்; படவேடத் தூய்மையும்,நெறி தடுமாறுகின்ற ஒரு ர்க்கனுக்கும் அளவிறந்த புணர்ப்புடைய வொரு வனிஸ் நகரத்தவளுக்கு மிடையே நிகழ்ந்த வொரு நாய்ய பிரதிக்கினையும், எனது சூழ்ச்சித்திறமைக் ம் நரகர்குலத்திற்கும் விஞ்சிக்கடந்த கடினமுடைய ா யமைந்ததில்லையாயின் அவளை நீ அடைந்து தீர் ாய் [25]; ஆகையால் பணத்தைச் செய்துகொள். ன்னை முழுக்கிக்கொள்வதற் கொரு பெருவாரி[26]! முழுவதும்வழிதப்பிப்போயதொன்று அது[27].நீரில் முழுகி நீ அவளின்றிப் போவதனினும், நினது இன் த்தைச் சூழ்வதில் தூக்கிலிடப்படுவதையாகிலும் தடிக்கொள். [28]

ராட:— முடிவினை நான் பற்றிநிற்பேஞயின், என் ம்பிக்கைக்கு நீ உறுதியாயிருப்பாயோ?

இயா:—என்னைப்பற்றி உனக்கு நிச்சயம்—போ, பணத்தைச் செய்— உனக்குப் பன்முறை சொல்லியிருக்கின்றேன், மீண்டும் மீண்டும் திரும்பவும் இது சொல்கின்றேன், மூரனைப் பகைக்கின்றேன் நான்: என்றன்வழக்குஇதயத்தாயது; உன்னதற் கிருக்குங் காரணமும் குறைந்ததன்று. அவன்மீது பழி தீர்த்துக்கொள்வதில் நாம் கூடிக் கலந்திருப்போம்[29]. காலத்தின் கருப்பையில் சம்பவங்கள் பல உள, அவை உயிர்க்கப்படும் [30]. கட; போ. நின் பணத்தைச் சேகரித்துக்கொள். நாளை நாம் இதுபற்றிஇன்னும் பேசுவோம். விடைகொள்.

ராட:— காலையில் நாம் எங்குச் சந்திக்கலாம்?

இயா:— நான் தங்கியிருக்கு மிடத்தில்.

ராட:—பொழுதோடுநான் உன்னிடம் வருவேன்.

இயா:— ஆகட்டும் ஆகட்டும்; நல்விடை—கேட்கின்ருயோ நீ, ராடரிகோ?

ராட:—யாது சொல்கின்ருய் நீ?

இயா:—முழுகுவதைப்பற்றி இனிமேல் இல்லை, கேட்கின்றதா?

ராட:—நான் மாறிவிட்டேன்.சென்றுநான் என் நிலங்களையெல்லாம் விற்றுவிடுவேன்.

இயா:—ஆகட்டும் ஆகட்டும்: நல்விடை யுனக்கு! போதிய பணம் உன் பையிற் போட்டுக்கொள்.

[ராடரிகோ போகின்ருன்]

இப்படியே எப்பொழுதும் என் மூடனை நான் என் பணப்பை யாக்கிக்கொள்கின்றேன் [31]. இல்லையேல், என்னுடைய விளையாட்டிற்கும் இலாபத்திற்

(27) தற்கொலை புரிந்துகொள்வது, மிகவும் நெறிதப்பிய காரியமாம்.

(28) டெஸ்டிமோஞவைத் தொடர்வாயாஞல், ஒருகால் உன்னைப் பிடித்து ஒத்தெல்லோ தூக்கிலிட்டுவிட்டாலும், எப்படியும் சாகத்துணிந்த உனக்கு அதஞல் நஷ்டமொன்றும் இல்லையே. அவளை யடையாமல் இப்பொழுதே சாகத்துணிந்த உனக்குஅதஞல் நஷ்டமொன்றும் இல்லையே. அவளையடையாமல் இப்பொழுதே சாவதனினும், அவளை அடைந்து பின்னே சாகநேர்ந்தாலும், அவளைப் பெற்ற இன்பமாவதுஇலாபமல்லவா—என்பது பொருள்.

(29) நான் ஒத்தெல்லோவைப் பகைப்பதற்குரிய காரணம் என் இதயத்தில் ஆழ்ந்திருக்கின்றது; மேற்புறமான சிறு பகை யன்று; டெஸ்டிமாஞவைக் கவர்ந்து கொண்டாருகையால், நீயும் அவனைஅப்படியே ஆழ்ந்து பகைக்கவேண்டியவஞக இருக்கின்ருய். நாம் இருவரும் சேர்ந்து அவன்மீதுபழிதீர்த்துக்கொள்வோம்—என்பது பொருள்.

(30) காலமானது ஒரு பெண்ணுகவும், அதனுடைய கர்ப்பப்பையில் பல சம்பவங்கள் கருத்தரித்திருப்பதாகவும், அவை முதிர்ந்து இனி வெளிவரும் என்றும் கூறுகின்றஇவ்வுருவகம், "பலகாரியங்கள் நிகழவேண்டியிருக்கின்றன, காலவளவில் அவை தெரியவரும்" என்று பொருள்படும்.

(31) என் மூடன் - என் கையில் அகப்பட்ட மூடன். மூடனைத் தன் பணப்பை ஆக்கிக்கொள்வதாவது—அவனுடைய பணத்தைத் தன்னுடையதாக வஞ்சித்துக் கவர்ந்துகொண்டுவிடுவது.

(32) உள்ளான் குருவி - ஒருவகைச் சிறு குருவி. தன் வஞ்சனைக்கு எளிதில் ஆளாகின்ற ராடரிகோவை,வேடர் கோலால் அடித்துக் கொல்கின்றவரையில் பறந்துபோகத் தெரியாமல் அகப்பட்டுக்கொள்ளும் அசட்டுத்தனமுள்ள உள்ளான்குருவியென்றுஇகழ்கின்ருன் இயாகோ.

ஒத்தொல்லோவைக்கெடுப்பதற்குச்சூழ்கின்றஇயாகோ ராடரிகோவைத் தன்னுடன்சேர்த்துக்கொள்வதுஅந்தச் சூழ்ச்சிக்கு உதவியாம் பொருட்டன்று. டெஸ்டிமோஞவைக் காட்டிக் காட்டி அவன்கைப் பணத்தையெல்லாம் பறித்துக்கொள்ள வேண்டுமென்ப தொன்றே இவன் நோக்கம். ஆதலாற்ருன், "உன் பையில் பணத்தைப் போட்டுக்கொள்" என்றென்று தான் சொல்வது அனைத்திற்கும் பல்லவிபோல் இடைவிடாமல் இயம்பி வருகின்ருன்.

அபசாரம் - பெரியோருக்குச் செய்யும் பிழை. அறிவும்அனுபவமும் பெறுவதெல்லாம் தன்னுடையஇலாபத்திற்காகப்பிறரைவஞ்சிப்பதற்கு அவை உபயோகப்படும் பொருட்டேயென்றும், அப்படி உபயோகப்படுத்தாமல், உண்மையாக இருந்தால், தான் சம்பாதித்துக்கொண்ட உலக அறிவிற்கு அபசாரம் செய்ததாகும் என்றும் கூறுகின்ருன்.

(33) என்மனைவியுடன் ஒத்தொல்லோகளவொழுக்கங் கொண்டிருக்கின்ருன் என்று ஜனங்கள் கருதுகின்ருர் - என்பது பொருள்.

(34) இயாகோ ஒத்தெல்லோவைக் கெடுத்தொழிக்கப் புக்கதற்குக் காரணம் இதுதான் என்று எண்ணலாகாது. ஒத்தெல்லோவிற்கும் இயாகோவின்மனைவியாகிய எமிலியாவிற்கும் களவொழுக்கம் இருந்ததென்பதற்கு இந்நாடகம் முழுவதும் எள்ளத்தனையும் ஆதாரம் இல்லை. இப்படி ஒருவதந்தி இருந்ததென்று இவன்கூறுவதே பொய்யாயிருக்கவேண்டும். காரணமின்றியே குரூரமுடைய இக்கொடியோன், காரணம் ஒன்று கற்பனை செய்து நாடிக்கொள்கின்ற கயமையாம் இது. இவ்வகையில் இவன் அக்கூனியையே ஒக்கின்ருன். அவ்வதந்தி ஒன்று இருப்பினும், அதனை நம்பினவனும் அல்லன் இவன். இராமனைக் கெடுப்பதென்று கொடுமனக் கூனி முதலில் துவக்கிப் பிறகே பாணியில் உண்டை உண்டதனை உன்னலாஞள். இயாகோவும் அப்படியே ஒத்தெல்லோவை முதலில் கெடுக்க ஆரம்பித்துப் பிறகு இவ்வகை ஒரு சந்தேகத்தைக் கற்பனைசெய்துகொள்ளலாஞன்.

(35) என்னிடத்தில் ஒல்தெல்லோ நல்ல மதிப்புவைத்திருப்பதால், என்னுடைய சூழ்ச்சிக்கு அவன் எளிதில் இரையாவான்.

குமல்லாமல் இத்தகைய வொரு உள்ளான்குருவியுடன் காலத்தைச் செலவுசெய்வேனுனல், நான் ஈட்டியிருக்கின்ற என்னுடைய அனுபவ அறிவிற்கே அபசாரம் செய்தவனாகவேண்டும்[32]. அம்மூரனைப் பகைக்கின்றேன் நான். என்னுடைய துப்பட்டிகளுக்கு இடையே அவன் என்னுடையகாரியத்தைச் செய்துவிட்டானென்று வெளியே கருதப்படுகின்றது[33]. அது உண்மையோ என்பதை நான் அறியேன்; ஆயினும், அந்தவகையில் வெறும் சந்தேகத்தைப்பற்றியே நிச்சயம்போல் நிகழ்த்திவிடுவேன்[34]. என்னை நன்கு மதிக்கின்றான் அவன்; நான் கருதியது அவன்மீது பின்னும் நன்கு தன்காரியத்தைச் செய்யும்[35]: காஸ்ஸியோ தகுந்த மனிதன்[36]: இப்பொழுது பார்க்கின்றேன்; அவனது இடத்தை அடைவதற்கும், இரட்டைக் கைதவத்தில் எனது எண்ணத்திற்குத் தோகை சூட்டுவதற்கும்[37]. எப்படி, எப்படி?—பார்ப்போம்—சில காலத்திற்குப்பின், அவனது மனைவியுடன் இவன் அளவுகடந்து பழகுகின்றானென்று, ஒத்தெல்லோவின் காதினைக் கெடுத்துவிடுவது— சந்தேகப்படுவதற்குரிய ஆளின் உருவமும் மிருதுவான சுபாவமும் உடையவன் இவன்: மங்கையர் பொய்ப்பதற்கே சமைந்திருப்பவன்[38]. மூரனோ, உத்தமர்போல் தோன்றுகின்றவர்களை அப்படியே மதிக்கின்றவொரு கபடற்ற மலர்ந்த சுபாவமுடையவன். கழுதைகளைப் போல் மெல்லவே மூக்கினுல் நடத்தப்படுவான் அவன்[39] பற்றிக்கொண்டேன்— கலந்துவிட்டது —நரகமும் இரவும் கொடுங் கோரமான இப்பிறவியை உலகவெளிச்சத்திற்குக் கொண்டுவரவேண்டும்[40].

[போகிறான்]

(36) என்னுடைய சூழ்ச்சிக்கு உபயோகமாகத் தகுந்தவன் காஸ்ஸியோ - என்பது பொருள்.

(37) அவனது இடத்தை அடைவது-காஸ்ஸியோவின் உத்தியோகத்தை அபகரித்துக்கொள்வது.

கைதவம் - மோசம், வஞ்சனை. காஸ்ஸியோவைக் கெடுத்து அவன் உத்தியோகத்தை நான் அபகரித்துக்கொள்வது, ஒத்தெல்லோவைக் கெடுத்து என் பகையைத் தீர்த்துக்கொள்வது ஆகிய இந்த இரண்டு வஞ்சனைகளையும் ஒருங்கே செய்து நான் கொண்ட கருத்தைச் சிறப்பாக நிறைவேற்றிக்கொள்வேன்—என்பது பொருள்.

தோகைமயிலிற்கு அலங்காரமாவதுடன், அதனை விரித்து அப்பறவை தன் பெருமையைக் காட்டிக்கொள்வதுபோல், இந்த வஞ்சனைகளால் என்னுடைய இலாபத்தையும், ஒத்தெல்லோவை அழித்தேன் என்ற செருக்கையும் அடைவேன்.

(38) இவன் - காஸ்ஸியோ. ஆளின் உருவம் - புருஷ வடிவு. மங்கையர் பொய்ப்பது - இவன்மீது மோகித்துத் தம் புருடரை வஞ்சித்துவிடுவது. இவனோடு பழகுகின்ற தம்மனைவியரிடத்தில் கணவர் கட்டாயம்சந்தேகங்கொள்வார்.

(39) கழுதையின் மூக்கில் கயிறுகட்டி எவ்வளவு எளிதாக நடத்தலாமோ அவ்வளவுஎளிதாக இந்தக்கபடமற்ற மூரனையும் நடத்தலாம்—என்பது பொருள்.

(40) பற்றிக் கொண்டேன் - என்ன செய்வதென்று நிச்சயித்துவிட்டேன். நரகத்தின் பாவமும் இருளுடைய வஞ்சனையும் புணர்ந்து நான் செய்யப்போகும் கொடுமையைக் கருக்கொண்டுவிட்டது; இனிப் பிரஸவமாக வேண்டியதுதான்.

முதல் அங்கம் முற்றிற்று.

---

# வில்லிபாரதம்

## துரியோதனன்-இராசராசன்

[166-வது பக்கத் தொடர்ச்சி]

இவ்வாறு வீடுமனிடத்தும் இராசராசன் அகங்குழைந்து பரிவுகூர்தலைக் கண்டோம். இதற்கு முன் கன்னன்மாட்டுக் கொண்டிருந்த ஒரு அதிசய நட்பினைப்பற்றியும் நாம் ஆராய்ந்தோம். எனினும், இன்னவாறு இவர்களிடம் பரிவுகூர்ந்த குணமும் இவனுக்கு உளதெனினும், இவன் இதயமில்லாதவனென்றும், ஆன்ம உணர்ச்சிகளால் கட்டுப்படாத எந்திரமனைய வாழ்க்கையே வாழ்ந்தவன்என்றும்நா முதலில்கொண்ட கருத்தை மாற்றிக்கொள்ள வேண்டுவதில்லை. இத்துணைபேர், தம்பியர் தனையர் மாட்டு இல்லாத ஒரு பரிவினை இவ்விருவரிடத்து மாத்திரம் வைத்தானெனில், அதுவே இவனது இதயத்தின் குறுகிய உணர்ச்சிகளை நன்கு விளக்கும். இவ்வாறு வாழ்ந்த இவன், இராவணனைப்போல் தனது தடந்தோள்களை நம்பாமலும்,

ஈசனே முதலாமற்றை மானிடர் இறுதியாரும்
[கொற்றத்தேன் வீரக்கோட்டி
பேசுவா ரொருவர்க் காவி தோற்றிலேன்......

என்றுவீரம்கூறுமலும், தன்னைக்காட்டிலும்உயர்ந்தவரும் ஒப்பாருமாகிய உறவினரது கட்டுப்பாடான பலத்தைக்கொண்டு இராவணன் பகைவரை எதிர்த்ததுபோல் அல்லாமலும், தனது அறிவினைப் பயன்படுத்தியும், எல்லோர்க்கும் ஏற்றவாறு இன்சொல் வழங்கியும், தன் உறவினரையே மிகுதியும்நம்பாமல், மதியின்துணைகொண்டு அயலாரையும் தனது செய்கைகளால் தன்னுடன் பிணித்தும், சரித்திரத்திற்குத் தெரிந்துள்ள இராசதந்திரிகள் பலருக்கும் ஒப்பிடத்தக்க திறமை வாய்ந்திருந்தான். தனது அரசியலின் மூலமந்திரம் சூழ்ச்சியே என்பதை அவன், கன்னன் பட்டபோது புலம்புகையில் தெளிவாக வெளியிட்டது காண்க:—

சூழ்வேலை யுலகாளும் சூழ்ச்சியுமிச்
சூழ்ச்சி தன்னுல்,
வீழ்வேனே அமராட வீமனொடு
தலைநாளில் விளைந்த செற்றம்
தாழ்வேனே.................

இவ்வாறு இவனுக்கும் இராவணனுக்குமுள்ள பேதத்தினை ஆங்கிலஆசிரியர், ஜான் மார்லி என்பார் பதினொன்றும் லூயியைப்பற்றிக் கூறும் வாசகத்தில் செவ்விதின் விளங்குவது காணலாம். லூயி அரசனுக்கும் அவனுக்கு முன்னாலாண்டவருக்குமுள்ள அரசியல் மாறுபாட்டினைப்பற்றி அவர் கூறுவார் ‡. ‘அவன் கூட்டக்கட்டை நம்பாமல் இராசதந்திர முறைகளையும், வீரத்தினை எதிர்க்கச் சூதினையும், சேனைபலத்தை எதிர்க்க அறிவுத்திறனையுமே கைக்கொண்டவன்’ என்னும் சொற்களால் இராவணனதுமுறைகளுக்கும் இச் சுயோதனனது முறைக்குமுள்ள வித்தியாசத்தினை எடுத்துரைக்கலாமல்லவா?

‡ He substituted diplomacy for feudalism, craft for force, intellectual strength for the strength of armies.



ஆயினும் சுயோதனன் வெற்றிபெறவில்லை; வால் போல் வெற்றிபெற்றதுபோல், பதினொன்றும் லூயி வெற்றிபெற்றதுபோல், இவன் வெற்றியடையாமல் கடைசியில் அழிந்தேபோனான். அதற்குக் காரணம்: இவனுக் கெதிர்நின்று இவனது முயற்சியினைப் பயனிலதாக்கிவிட்டது ஓர் அதிமாநுட உருவம். ஆனால் அவ்வுருவத்தின் மகிமையை இந்தச் சுயோதனனால் அறிந்துகொள்ள இயலவில்லை. தனது சாமர்த்தியமுழுதும் கூட்டி அன்று சயத்திரதனைக் காக்கவேண்டும் என்று முனைந்தநாளில், வெற்றி கையுறும் சமயத்தில், சயத்திரதன் தலையிழக்கப், பரிதியும் ஒளிபெற்று விளங்கி யாவரும் வியப்புறுமச் சமயத்தில், அவன் வியப்புறவில்லை; கோபக்கனல் கண்வழியுக,

முடையெடுத்த நவநீதம் தொட்டுண்டும்
கட்டுண்டும் முதனுள் நாகக்
குடையெடுத்தும் மழைதடுத்தும் விரகினுக்கோர்
கொள்கலமாம் கொடிய பாவி!
படையெடுத்து வினைசெய்யே னெனப்புகன்ற
மொழிதப்பிப் பகைத்த போரின்
இடையெடுத்த நேமியினுல் வெயின்மறைத்தா
னின்னமிவன் என்செய் யானே.

என்று வைதனனே யொழிய, அச்சமாவது ஆன்ம உணர்ச்சியாவது அவனது அகத்தில் பெருகவில்லை. ‘எனினும் நமது “இலக்ஷியத்தைப்பெற முயல்வோம் வருவது வருக” வென்னுமொரு துணிவுடன் அவன் எடுத்த முயற்சிகளெல்லாம் நாளுக்குநாள் பயனிலாதொழிய, பின் பதினெட்டாம்நாள் வீமன் அவனைத் தள்ளி அவனது மோலியை உடைத்தான். அப்பொழுதும் அவனது சினம் வீமனிடம் செல்லவில்லை. அதற்குமாறாக, தந்திரமே உருவெடுத்து நின்ற அக் கண்ணனிடம்தான் சென்றது.

மலைத்த போர்தொறும் எனக்குநீ செய்பிழை
மற்றுளோர்செய நினைப்பரோ?
குலத்தி லேயிழி குலத்த ரானவர்
குறிப்பி லாதிவை பிறக்குமோ
சலத்தி னுல்வினை யியற்று வார்முடி
தரித்தகா வலருடன் ஒப்பரோ
நிலைத்த வாழ்வவர்க் கினிக்கொ டாயென
நினைத்த காரிய முடித்தியே.

என்று தனக்கு நேர்ந்த தோல்வியை ஒப்புக்கொண்டான். இனித்தனக்கு உலகவாழ்க்கையில் பங்கில்லை; தனது வாழ்க்கையெந்திரமும் கெட்டுவிட்டது, என்பதை யுணர்ந்தான். சுற்று நேரத்திற்கெல்லாம் தனிமையாயிருந்த அவனை அசுவத்தாமன் நண்ணினுன்; தன்னை வீணுகச் சந்தேகித்ததுபற்றி முறையிட்டு அப்போதாவது சேனுதிபத்தியம் கொடுக்குமாறு கேட்டு வாங்கிக்கொண்டான். ஆனால் வாழ்க்கை எந்திரம் இற்றுப்போன சுயோதனனுக்குப் பழிவாங்கும் உணர்ச்சியுமில்லை. அவ்வாழ்க்கை எந்திரம் ஒரு லக்ஷியத்தைக் குறிவைத்துச்சென்றது. ஆனால் லக்ஷியம் கைகூடாமல் எந்திரம் இற்றது. இற்றதும் அது ஓய்ந்துவிடுவதுபோலவே துரியோதனனும் ஓய்ந்துவிட்டான். அவ்வெந்திரத்திற்குஎவ்வாறு பழிவாங்க வேண்டும் என்னும் உணர்ச்சியிருக்காதோ அதைப்போலவே சுயோதனனுக்கும் வாழ்க்கையெந்திரம் முறிந்ததும் அவ்வுணர்ச்சி ஏற்படவில்லை. எந்திரத்தில் எவ்வாறு நாம் உணர்ச்சியை எதிர்பார்க்கலாம்? ஆதலின் அசுவத்தாமன் உப ஐவரது முடிகளைக் கொய்து கொண்டுவந்து நின்றபோது, கானகம் ஏகித் தவம்செய்யுமாறு அவனுக்கு உபதேசம் செய்து, கடைசியாகத் தன் தாய்தந்தையரை ஸ்மரித்து இவ்வுலகை நீங்கினுன் இராசராசன்.

முற்றும்

---

# சூரியன்

[170-வது பக்கத் தொடர்ச்சி]

## IV. ஆராய்ச்சிக் கருவிகள்

புரிவின்றி யாக்கைபோல் போற்றுவ போற்றிப்
பரிவின்றிப் பட்டாங் கறியத்—திரிவின்றி
விண்ணிவ் வுலகம் விளைவிக்கும் விளைவெல்லாம்
கண்ணி யுரைப்பான் கணி.

புறப்பொருள் வெண்பாமாலை.

துணைக் கருவிகள்:—தூரதிருஷ்டிக் கண்ணுடிகளைச் செவ்வனே பயன்படுத்தற்குச் சிலஉபகருவிகள் உள்ளன. இவற்றையும், மேலே ஐயனுரிதனுர் கூறுகின்றபடி, வானசாத்திரிகள், தம் யாக்கையே போலப் போற்றி வரலாகின்றனர். தூரதிருஷ்டிக் கண்ணுடி, தூரத்திலுள்ளவற்றை அருகே கொண்டுவந்து காட்டும். அதனுல், அத் தூரப்பொருளின்வடிவத்தையும், உருவத்தையும், இயக்கத்தையும், இருப்பையும் நாமறியலாம். அவ்வாறு காணப்படும் பொருள்எதனுலாகியது? அங்கேஇருப்பதுஇரும்போ? பொன்னோ? நீரோ? ஜலமூல வாயுவோ? மற்று ஏதோ? அஃது எவ்வளவு சூடாக இருக்கிறது? இவற்றை யறியவும், நமது மனம் அவாவுகின்றது. இத்தகைய ஆராய்ச்சிக்குத் தூரதிருஷ்டிக் கண்ணுடிமட்டும் போதாது. வேறு சில துணைக்கருவிகளும் வேண்டும்.

ஒளி உடைக்கும் கருவி (Spectroscope):—நாம் காண்கிற பொருள் எதனுலாயது என்று எவ்வாறு அறிவது? ஒளி யாராய்ச்சியாளர்கள், இதனை, மிகமிக வெளிதில் கண்டுபிடித்துவிடுகின்றனர். ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு வகையான சிறப்பொளி உண்டு. ஆதலினுல் அப்பொருளின்நின்று வரும் ஒளியை ஆராய்வோமானுல் அப்பொருளில் என்ன என்ன இயற்பொருள்கள் (elements) உள்ளன வென்று அறுதியிட்டுக் கூறலாம். ஒளியானது, வானத்தின்கண் குறுக்கலைகளாகப்பரவிவருகின்றது. இந்த அலைகளினது நீளத்திற் கேற்றவாறு ஒளிகள் மாறுபடுகின்றன. அலைகளின் நீளம் மாறமாற ஒளியும் மாறும்; எனவே, இவ் வொளிபேதங்களுக்குக் கணக்கே இல்லை என்பதாயிற்று. ஆனுல் இவற்றிலே ஒருசிலவே நம் ஊனக்கண்ணுக்குப் புலனுகின்றன. மற்றவற்றைத் துணைக் கருவிகள் கொண்டே ஆராய்தல் வேண்டும். நாம் வெள்ளொளி என்று வழங்கி வருவது, ஓரே ஒளியாகக் காணப்பட்டாலும் அஃது ஓரே ஒளியல்ல; பல ஒளிகளின்சேர்க்கையே யாகும். அலையளவுகள் வேறுபட்ட (Rays of different wave-lengths) பல ஒளிக்கற்றைகள் சேர்ந்ததே வெள்ளொளியாம். இதனை, நியூடனே, முதன் முத

லாகக் கண்டவர். பல ஆண்டுகளுக்கு முன்னர், இப்பெரியார் இருட்டறையினுள் நுழைந்த சூரியக்கதிர் ஒன்றை, முப்பட்டைப் பளிங்கின் ஒரு பக்கத்தே தாக்கச்செய்து மறுபக்கமாகச் சென்று சுவரின்மீது விழும்படி செய்தார். இதுவும் கண்ணாடி வில்லையின் வழியாக விழுகின்ற சூரியபிம்பம்போல் இருக்கும் என்று எதிர்பார்த்தார். ஆனால், அத்தகைய சூரிய பிம்பத்தைக் காணவில்லை; இந்திர தனுசைப் போன்ற பிம்பததைக் கண்டு வியப்படைந்தார். வானவில்லைப் போன்ற இத்தோற்றத்திற்கு ஒளி வரிசை (Spectrum) என்று பெயரிட்டார். இவ் வொளிவரிசையில் ஒன்றின் பக்கத்தில் ஒன்றாக, முறையே சிவப்பு நிறமும் (Red), கிச்சிலி நிறமும் (Orange), மஞ்சள் நிறமும் (Yellow), பச்சை நிறமும் (Green), நீல நிறமும் (Blue) அவிரி நிறமும் (Indigo) நீலோற்பல நிறமும் (Violet), ஒரு வானவில்லில் காணப்படுவதுபோல், வெகு இரம்மியமாக விளங்கின. இதற்குப்பின்னர், இவர், இம்முப்பட்டைப் பளிங்கை அமைத்து ஒரு கருவி செய்தார். அதனையே முப்பட்டை ஒளியுடைக்குங் கருவி யென்பார். இதனை ஒளியுடைப்பான் என வழங்கலாம். ஒரு முப்பட்டைப் பளிங்கின் வழியே செல்லும் ஒளியானது உடைந்து வானவில்லின் நிறத்தைத்தரும் என்பதை அறிந்த நமது நாட்டினர்,முற்காலத்திலேயே, இம்முப்பட்டைப் பளிங்குகளைப் பல உருவங்களாகச் செய்து,கோத்து, விளக்குகளின் சுற்றிலும்கட்டி அலங்காரம் செய்து வந்தார்கள். இதைச் சாதாரண வழக்கில் 'லஸ்தர்காய்' (Lustre Fruits) என்று கூறுகின்றனர். இப்பட்டைகளின் மேன்மையாலேயே வைரக்கல்லும் பல நிறங்களோடு சொலிக்கின்றது. ஆகையால் ஒளியுடைப்பானில் முக்கிய பாகம் முப்பட்டைப் பளிங்கே யாகும். இதனுள்ளே நுழையும் வெள்ளொளி, உள்ளேபுகும்போதும் வெளியே வரும்போதும் ஆக, இருமுறை மடங்கி வக்கிரிப்பதோடு (Refracted), அதனுள் ளிருக்கும் ஒளிக்கூட்டமும் நிலைகுலைந்து சிதறிப்போவதால் (Dispersed), வானவில்போன்ற எழுநிற வரிசை தோன்றுகின்றதென விஞ்ஞான சாஸ்திரிகள் விளக்குகின்றனர். ஒரு சாதாரணமான முப்பட்டையினால் உண்டாகின்ற நிறவரிசை, கலப்பின்றிச் சுத்தமாகவும் (Pure) வரையறுக்கப்பட்ட நிற எல்லைகளோடும் விளங்குவதில்லை. ஆகையால், அதனைத் தூரதிருஷ்டியைக் கொண்டும், ஒளிவட்ட வில்லையைக்கொண்டும், செப்பனிட்டுத் திருத்தவேண்டும். இவ்வாறு திருத்தியபின்னர்த் தோன்றும் நிறவரிசைகள், ஒளி மூலத்திலுள்ள பொருள்களுக் கேற்றவாறு, ஊர்த்துவ புண்டரங்கள்போன்ற நேர்க்கோடுகளாய் (Vertical lines) விளங்குகின்றன. அக்கோடுகளில் முக்கியமானவற்றைக் கொண்டு, ஒளியின் மூலத்தில், இவ்விப்பொருள்கள் உள்ளன என்று நாம் நிர்ணயிக்கலாம். சூரிய வெளிச்சத்தை உடைத்து நோக்கின், பல்லாயிரக் கணக்கான இக்கோடுகளைக் காண்கிறோம் (Fraunhofer Lines of the Solar Spectrum). இவற்றை ஆராய்ந்தே, சூரியனில் இன்ன இன்ன பொருள்கள் இருக்கின்றன என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

ஒளிபுரட்டும் கிராதி (Diffraction grating):— ஒளி உடைப்பானின் வழியே தோன்றும் நிறவரிசை பெரியதல்ல. ஒளியலைகளோ கணக்கற்றன எனக்கண்டோம். ஓர் ஒளியலைக்கும் மற்றோர் ஒளியலைக்கும் வேற்றுமை சிறிதாக இருப்பின், ஒளி உடைப்பான் காட்டும் நிறவரிசையில்,அவ்வேற்றுமையைத் தெளிவாகக் கண்டு அறுதியிட்டுக் கூறமுடியாது. இவ்வாராய்ச்சிக்கு இவ்வொளிவரிசையைப் பெரிதாக்கிக் காணுதல் வேண்டும். இவ்வாறு செய்வது, இவ்வொளிபுரட்டும் கிராதியே யாகும். இந்த ஒளி புரட்டி, அற்புதக் கருவியாயினும் செய்வதற்கு அரியதல்ல. இஃது இருவகையாகும். ஒரு கண்ணாடியின்மீது, ஒரு சிறு வைரம் புதைத்த நுனியையுடைய ஆணியைக் கொண்டு, ஒரு அங்குலத்துக்கு 15000 முதல் 30000 வரை, சரிதூரமான (Equidistant) கோடுகளை நேருக்கு நேர் (Parallel) வரைவோமானால், அஃது ஒருவகை ஒளிபுரட்டும் கிராதியாகும். இவ்வாறு, பளிங்கினால் செய்தவற்றை, ஊடுருவு ஒளி புரட்டி (Transmission grating) என வழங்குகின்றனர். ஸ்பெகுலம் (Speculum) என்னும் ஒருவகை வெங்கலத்தை மேடுபள்ளமின்றிச் சமன்செய்து, வழவழப்பாக மெருகிட்டு, அதன்மீது மேற்கூறியவாறு கோடுகளைக் கீறினால், அது மற்றொருவகை ஒளிபுரட்டியாகும். இஃது உள்வளைந்திருகும்(Concave Grating). இதனைப் பிரதிபிம்ப ஒளிபுரட்டி (Reflection Grating) என வழங்குகின்றனர். ஒளிபுரட்டும் இக்கிராதியைஒளிபுரட்டும் படிக்கட்டு என்னக் கூறுவதும் பொருத்தமாகும். எழு போர் வீரர்கள் ஒரு வரிசையாகக் கைகோத்துக்கொண்டு உல்லாசமாக ஒருங்கே, நாடகமேடைக்கு நடந்து செல்லுவார்களானால், அவர்கள் எழுபேரும், ஓரே கோட்டில் இருப்பர் அன்றோ? அவர்கள் நாடிய அரங்கின்மீது ஏறிச்செல்லக் கீழிருந்து மேல்செல்லும் படிக்கட்டுகள், மிக்க அகலக் குறைவாகவும், குட்டையாகவும், இருக்குமாயின், இவ்வெழு நண்பரும் ஒருங்கே ஏறுதல் இயலாது அன்றோ? இவர்கள் எழுவரும் வேறு பிரிந்து, பருத்துக் கொழுத்துள்ளவன் பின்னேயும், இளைத்து மெலிந்துள்ளவன் முன்னேயும், மற்றையோர், அளவுக்கும் பருமனுக்கும் ஏற்றவாறு இடையேயுமாய் இப்படிக்கட்டில் ஏறுவர். அஃதேபோல, வெண்ணிறமாய் விளங்கும் எழுவகை நிறக்கூட்டங்கள், நமது பரிசோதனை அரங்கிலே ஏறும்போது, ஒழுங்கு தடுமாறுவதற்காக ஏற்படுத்திய கருவியே இந்தஒளிபுரட்டியாகும்.

இரண்டிற்குமுள்ள வேற்றுமை:—ஒளிபுரட்டி மூலமாகவும் ஒளியானது உடைந்து ஏழு நிறங்களாய் விளங்குகிறது. ஒளியுடைப்பானும், ஒளிபுரட்டியும், ஒளியுடைக்குங் கருவிகளேயாயினும், இவற்றால் உண்டாகும் நிறவரிசைகளில் தராதர பேதமுண்டு. முப்பட்டைப் பளிங்கினால் உண்டாகின்ற எழுநிற பிம்பமோ ஒன்றேயாகும். ஒளிபுரட்டியிலோ,வெளிச்சம் பாயுமிடத்திற்கு இருபுறத்திலும், கணக்கற்ற (infinite) பிம்பங்களை, ஒன்றின் பக்கத்தில் ஒன்றாகக் காண்கிறோம். இந்தப் பிம்பங்கள், ஒளி தாக்குகின்ற இடத்தினின்று தூரமாச் செல்லச்செல்ல, அகன்று பெரிதாய்த் தோன்றுகின்றன; அவ்வொளிகளிலுள்ள கோடுகளும் விரிந்து விளங்குகின்றன. இவற்றிலே ஒளியலைகளின் வேறுபாட்டைத் தெளி



வாகக் காணலாம். இதனால், முப்பட்டைப் பளிங்கைக் காட்டிலும், ஒளி புரட்டி, சிற்சில வகையான நிறவரிசை ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுகிறது.

புகைப்படப்பெட்டி (Photographic Camera) அநேக காலம் உழைத்த பின்னே அக்கருவிகளால் நாம் காணும் காட்சி, நமது கண்ணை அவற்றினின்று எடுத்தவுடன் மறைந்து விடுகின்றது. இஃதன்றியும், ஏதேனும் ஒன்றை இடைவிடாது தொடர்ந்து, சில நேரம் வரை, பார்த்துக்கொண்டே இருந்தால், நமது கண்கள் களைத்துப்போய்விடுகின்றன (Fatigue). அன்னவாறு களைப்படைவதினால், உண்மைத் தோற்றம், சில சமயங்களில், மாறினாலும் மாறும். நாம் கண்ணாற் காணும் காட்சியை,அயலூரிலிருக்கும் நண்பர்களுக்குக் காட்டவுமியலாது; பின்னே வருவோரைக் காணச் செய்யவும் இயலாது. தூரதிருஷ்டிக் கண்ணாடிகளும் அதன் துணைக் கருவிகளும் கொடுத்தருளும் காட்சி, இவ்வாறு சில காலம் வரையில் நிலைத்திருந்து சில சமயங்களில் சில நிமிஷங்களுக்குள் மாறிவிடுகின்றது. மறுபடியும் அப்பிம்பத்தைக் காணப் பல நாட்கள் சென்றாலும் செல்லும். சில நக்ஷத்திரங்களிலிருந்து வருகின்ற வெளிச்சம் மிகக் குறைவு. சிவப்பிற்கு இப்பாலும், நீலோற்பல நிறத்திற்கு அப்பாலும் உள்ள எல்லைகளில் (infra-red and ultra - violet regions) விளங்கும் ஒளிகள், ஊனக்கண்ணுக் ககப்படாத அலையளவுள்ளவையாகும். அவற்றைக் கண்ணாலே காணமுடியாது. அவற்றையும், அவற்றிற்கென்று ஏற்படுத்திய புகைப்படத் திரைகளால், புகைப்படங்கள் பிடித்துக் காணலாம். நமது வானசாஸ்திர ஆராய்ச்சிக்கு வரும் பிம்பங்கள் எத்தன்மையவாயினும், புகைப்படம் பிடிப்போமாயின், அவை, என்றும் நிலைத்திருக்கும். நாமும் பின்னே அமைதியாக ஆராயலாம்; பிறர்க்கும் காட்டலாம்;பின்னோரும் ஆராய்வதற்கு அஃதே உதவும்; உண்மைத் தோற்றம்,இவற்றிலே, களைப்பால் மாறப்போவதில்லை. இதனை யறிந்த வானசாஸ்திரிகளும், அநேக ஆண்டுகளுக்கு முன்னரே, புகைப்படங்களை உபயோகிக்கலாயினர். புகைப்பட வேலையை, வெகு சீக்கிரத்தில் தேக கஷ்டம் அதிகமின்றியே, செய்து முடிக்கலாம். கருவி வழியே நேரே கண்ணிற்கண்ட வடிவங்களைவிடப் புகைப்படமெடுத்த உருவங்கள், இவ்வாறு பெரிதும் பயன்படுகின்றன.இக்காலத்தில் வர்ணங்களுடன் புகைப்படம் பிடிக்கத்தக்க கருவிகள் ஏற்பட்டுள்ளன. அவற்றை, நாம் பயன்படுத்துவோமாயின், ஓவியக்கலையே அவசியம் இல்லையாம். ஆகையால், இக்கருவிகளை நமது நக்ஷத்திரசாலையில் அப்போதைக்கப்போது உபயோகிப்பது ஆராய்ச்சிக் கின்றியமையாததாகும்.

ஒளிவரிசைச் சாதனங்கள் (Spectro-graph):— ஒளியுடைக்கும் கருவியின் வழியே கண்வைத்துப் பார்க்குமிடத்தே, திருஷ்டிஸ்தானத்தில் ஒரு புகைப் பெட்டியை அமைப்போமாயின், அஃதே ஒளிவரிசைச் சாதனமாகும். (Spectro-graph or Spectrum recorder) இதற்கு ஒளிவரிசைப் படம்பிடிப்பான் எனப் பெயரிடலும் தக்கதே. நட்சத்திர சாலைகளில் நாம் காண்கிற காட்சிகளை, இந்தக் கருவியின் உதவியால், புகைப்படம் பிடிக்கலாம். இவ்வேலைக்கு உபயோகப்படுகின்றபுகைப்படத்திரைகள் (Photographic Plates) எல்லாவகையான அலையளவுள்ள ஒளிகளையும் படம் பிடிக்கக்கூடியனவாக இருத்தல் வேண்டும்.

சூரிய ஒளிவரிசைச் சாதனம் (Spectro heliograph;-இந்தஅமைப்போடு, சூரியஆராய்ச்சிக்கென ஹேல் (Professor Hale) என்பவர், சூரியஒளிவரிசைச்சாதனத்தைச் செய்துள்ளார். இதற்கு ஒளிவரிசைப் படம்பிடிப்பான் எனப் பெயரிட்டாலும் பொருந்தும். இதனுதவியால் ஒருநிற வொளியிலே (Monochromatic light) சூரியனுடைய உருவப் படத்தைப் பிடிக்கலாம். இத்தகைய கருவியொன்று வில்சன் மலைச் சூரியநக்ஷத்திரசாலையில் (Mount Wilson Solar Observatory) இருக்கிறது. 1903-ம் வருஷத்தில் எர்க்ஸ் நக்ஷத்திரசாலையில் (Yerkes Obervatory, Wisconsin) முதன் முதலாக இத்தகைய கருவிகொண்டு, ஜலவாயுஒளியிலே(Hydrogen light) சூரியனுடைய படத்தைப் பிடித்தனர். இவ்வகைக் கருவியைக் கொண்டே கென்உட் நக்ஷத்திரசாலையில் (Kenwood Observatory, Chicago) சூரியனிலுள்ள மிகப்பிரகாசமான வெள்ளைத் திட்டுகளை (Flocculi) கண்டுபிடித்தனர்.

சூரிய ஒளி வரிசைத் திருஷ்ணி (Spectro-helioscope):—சூரிய ஒளிவரிசைப் படம் பிடிப்பானில் சிற்சில மாறுபாடுகள் செய்தால், கண்ணுக்குப் புலப்படாத பல காட்சிகளைக் கண்களாற் காணலாம். இந்தக் கருவியைச் சூரிய ஒளிவரிசைத் திருஷ்ணி என வழங்குகின்றனர். இச்சூரிய ஒளிவரிசை காட்டியின் உதவியால் சூரியப் பிழம்பு முழுவதையும் அதிலிருந்து வீசியெழுகின்றசுடர்களையும், சில நிமிஷகாலத்திற் காணலாம். தற்காலத்தில், நக்ஷத்திரசாலைகளிலே, இக்கருவியைக் கொண்டு பலப்பல அரிய ஆராய்ச்சிகளைச் செய்துவருகின்றனர். அவ்வாராய்ச்சிகளின் பயனாக, நமதுபூவுலகிற்காணும் செவ்வான ஜோதி, காந்தப் புயல், ஆகாசக்கிறி(atmospherics முதலிய மின்சார இயக்கங்களின் மூலகாரணங்களைக் கூடிய சீக்கிரத்தில் நாம் கண்டுபிடித்தல் கூடும்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட்ஸ் நஞ்சன்கூடு "சத்வைத்யசாலை" மருந்துகள்
"ஆல்மண்டைன்" (டானிக்). "பாலக்ஸ்" பேதிமாத்திரை. "ஸ்ப்ளிலரால்" (குழந்தை கட்டிக்கு)
சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
ஆதாரணம்-பாக்கேட்
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.
ம.ட.ச்யாவனப்ராச
சிறந்த டானிக்
சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
காஸ்ட்ராலகஸ்
ஜ்வரேக்
[பஸ்மங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

# அணியிலக்கணம்

[173-வது பக்கத் தொடர்ச்சி]

## தன்மையணி

[ஸ்வபாவோக்தி யலங்காரம்]

D. தொழிற் றன்மை:—

ஒரு பொருளினது உருவத்தின் தோற்றத்தை உள்ளபடி உரைத்தல் பொருட்டன்மை நவிற்சியும், அதுவே அப்பொருள் சேர்ந்திருக்கின்ற இனத்திற் குரிய பொது வருணனைபோல் நிற்குமாயின் சாதித் தன்மை நவிற்சியும், ஒரு மன இயக்கத்தினை அதன் மெய்ப்பாட்டுடன் வருணித்துரைத்தல் குணத் தன்மை நவிற்சியும் ஆகலாம் என ஒருவாறு பாகுபாடு செய்து காட்டினோம். இனி, ஒரு வினை அல்லது தொழிலை உள்ளபடி வருணித்துரைப்பது தொழிற்றன்மை நவிற்சியாகும் எனக் கொள்ளலாம். இதற்கு,

பழுதில் செய்வினை பதந்தொறும் வருவது
தொழிலின் தன்மை யென்மனார் புலவர்

என, வீரசோழிய உரையில் இலக்கணம் கூறப்பட்டிருக்கின்றது. இதனைக் கொண்டு, எதனைத்தான் தொழிற் றன்மையாகக் கொள்ளலாம் என்று நிச்சயிப்பது அருமை.

முற்குளம்பி னுற்கிளறி மோந்தங்கோர் முக்காலும்
பொற்சுண்ண மாடிப் புரண்டெழுந்து—நற்சென்னி
நேர்நிறுத்தி நின்றுதறிக் கங்கைநீ ருண்டனவே
பானிறத்த மால்வெண் பரி

[முன்குளம்பினால் நிலத்தைக் கிளறித் தரையை மோந்து எப்பொழுதும் பொன்போன்ற தூளிபடியப் புரண்டு எழுந்து, நல்லகழுத்தை நேராகநிறுத்திநின்று உடலை உதறிக் கங்கைநீரை, பால்போன்ற நிறத்தையுடைய சிறந்த வெண்மையான குதிரைகள் குடித்தன]

என்னும் உதாரணமும், "இது, தொழிலின் தன்மையைச் சொன்னமையால், தொழிற்றன்மை என்னும் அலங்காரமாயிற்று" என்ற வாக்கியமும் வீரசோழிய உரையில் வந்திருக்கக் காண்கின்றோம். மற்று, தண்டியலங்கார உரையில்,

சூழ்ந்து முரன்றணவி வாசந் துதைந்தாடித்
தாழ்ந்து மதுநுகர்ந்து தாதருந்தும்—வீழ்ந்தவிழ்ந்த
பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை
வாசத்தார் நீங்காத வண்டு.

[பாசங்களெல்லாம் அவிழ்ந்து விழுந்துவிட்டவர் விட்டுப்பிரியாத சிவபிரானது வாசனைபொருந்திய கொன்றை மாலையை அடைந்து நீங்காமலிருக்கின்ற வண்டானது, சூழ்ந்து ஒலிசெய்து நெருங்கி நறுமணத்துள் தோய்ந்து, இறங்கி, தேனைக் குடித்து மகரந்தத்தை அருந்தும்]

என்னும் உதாரணமும், "இது, வண்டின் தொழிலைக் கூறியதனால், தொழில் தன்மை" என்னும் குறிப்பும் வரையப்பெற்றிருக்கின்றன.

முன் உதாரணத்தில் குதிரை நீருண்ணலும் இவ்வுதாரணத்தில் வண்டு தேனுண்ணலும் அனைய சில தொழில்கள் சொன்முறை தேர்ந்து உள்ளபடியே உரைக்கப் பெற்றிருப்பதால், இவை தொழிற் றன்மை நவிற்சியணி யாகின்றன என்று கொள்வதற்கு இடையே ஒருவகை ஐயமும் எழுகிறது. ஏனெனில், உண்ணுதல் என்னும் அத்தொழில்மாத்திரம் இங்கு வருணிக்கப்பட்டிருக்கவில்லையே. உண்ணல் நடத்தல் ஓடல் அனைய தொழில்களை ஒருவராலும் அத்தொழில்களின் அளவே வருணிக்க இயலாது. அத்தொழிலைச்செய்கின்றவைகளோடு சேர்த்துத்தான் வருணிப்பது இயலும். குதிரை நீர் உண்ட விதம் இது, அல்லது வண்டு தேன் உண்ட விதம் இது என்ன ஒன்றினைச் சார்ந்து உரைப்பதன்றி அத்தொழிலை வருணிக்க வேறு வகையில்லை. இப்படி நோக்குங்கால் ஒன்று ஒருதொழிலைச் செய்யும்விதம் அது சேர்ந்த சாதியைப் பொருந்தியதா யிருக்கிற உண்மை புலப்படும். எனின், பொருட்டன்மை நவிற்சியைச் சாதித் தன்மை நவிற்சியிலிருந்து பிரித்திடுவது அருமையாகி நின்றபடியே, தொழிற்றன்மைநவிற்சி யணியையும் சாதித்தன்மை நவிற்சியணியினின்று பிரிப்பது மிக அருமையாக நிற்கிறது. குணத்தன்மைநவிற்சி யணியைப் பிரிப்பதிலும் இந்த இடுக்கண் தோன்றலாம். காமம் வெகுளி உவகை துன்பம் முதலிய மன இயக்கங்களை அவைகளுக்குஉரிய மெய்ப்பாடுகளால் வருணிப்பது குணத்தன்மை நவிற்சியாகலாம் என முன்னர்க் கூறினோம். இம் மெய்ப்பாடுகள், மனிதருக்கும் வேறு வேறு விலங்குகளுக்கு வேறு வேறாகவும் தோன்றுமென்பது வெளிப்படை. உவகையின் மெய்ப்பாடாக நாயும், வெகுளியின் மெய்ப்பாடாகப் பூனையும்தம்வாலை யாட்டும்; மனிதருக்கு இம்மெய்ப்பாடு இயலாது. ஆகையால் குணத்தன்மை நவிற்சியும் சாதியைச் சார்ந்தல்லது நிகழுமாறில்லை. ஆகையால், "ஒரு சாதியின் தன்மையை வருணிப்பது தன்மை நவிற்சி யணியாம்" என இலக்கணங் கூறி அதனை, சாதிப்பொருட்டன்மை சாதிக்குணத்தன்மை சாதித் தொழிற்றன்மை என்று மூன்று வகைளாகப் பிரிப்பதே பொருந்தும் போலும். "சாதி முதலியவைகளின் இயற்கைத் தருமத்தை ஓதுதல் தன்மை நவிற்சி" என்று குவலயானந்தம் சாதியை முதலில் வைத்து இலக்கணங் கூறத் தொடங்கியதும், பிறகு வேறு எவ்வகையையும் கூறாததும், இந்த முடிவிற்கு ஒருவாறு உதவியாகலாம். வடநூல் இலக்கணங்கள் சில் தன்மையணி என்னும் பெயரிற்குப் பதிலாய் ஜாதி என்னும் பெயரையே இவ்வணிக்குத் தந்திருக்கின்றன. இப்பெயரே தக்கதென்று நினைக்கிறோம்.

இன்னவாறு சாதியைச் சார்ந்து நிகழும் தொழிலினைத் திறம்பட வருணிக்கின்ற செய்யுள்கள் இலக்கியங்களில் பலவுள.

இராமன் துரத்த, மாயமானாகி வந்த மாரீசன் ஓடிய தன்மையை,

மிதித்தது மெல்ல மெல்ல
வெறித்தது வெருவி மீதிற்
குதித்தது செவியை நீட்டிக்
குரபத முரத்தைக் கூட்டி
உதித்தெழு மூதை யுள்ள
மென்றிவை யுருவச் செல்லுங்



கதிக்கொரு கல்வி வேறே
காட்டிய தொத்த தன்றே.

[முதலில் மெள்ள மெள்ள அடிவைத்துப் பிறகு மருண்டு வெறித்து, காதுகளை நெறித்து நீட்டி, குளம்புகளை மார்பில் சேர்த்துக்கொண்டு மேலெழுந்து குதித்து,...... ஓடியது]

எனக் கம்பர் மான்சாதிக் கிணங்க ஓடுதல் என்னும் தொழிலை வருணித்திருப்பது அழகியதோர் உதாரணமாம்.

அதிவீரராமபாண்டியன், மாதர் தயிர் கடையுந் தொழிலைப் பின்வருமாறு நைடதத்தில் வருணித்திருக்கிறார்.

முல்லையங் கோதை நல்லார்
முகமதி வெயர்வு தோன்ற
வல்லிநுண் மருங்குல் நோவ
வால்வளை வாய்விட் டார்ப்ப
மெல்விரற் காந்தள் சேப்ப
வெண்டயிர் கடையு மோதை
கொல்புலி முழக்க மென்ன
வயின்றொறுங் குளிறு மாதோ

இன்னவாறு இலக்கியங்கள்தோறும் உதாரணங்கள் பலப்பல எங்குங் காணலாம்.

இதுகாறும் கூறியவைகளிலிருந்து, பொருள்சாதி குணம் தொழில் என்று தன்மையணிக்கு வகுக்கப்பட்டிருக்கின்ற பாகுபாடு, ஐயமற நிற்கின்ற பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. இவை ஒன்றற்குள் ஒன்று செருகிக்கொண்டுவிடுகின்றன. ஆயினும் ஒரு உண்மையை மறத்தலாகாது. ஒரு சொல்லின் பொருளே போல், ஒரு பொருளின் அணியும் அது கூறப்படுகின்ற சந்தர்ப்பத்தைச் சார்ந்தே கருதப்படுதல் வேண்டும். சொல்லும் பொருளும் ஓரே திறத்தனவாயிருப்பினும், அவைகளைச் சொல்கின்ற புலவரது மனத்தில் அச்சமயம் எந்த 'அம்சம்' முதலாக நின்றது என்பது கொண்டு இவ்வணியின்வகை வேறுபடலாம்:—

கிளைபரந்த கொம்புகளும் நெறித்த காதும் அலைபோல் புரள்கின்ற கண்களும் நீண்டகழுத்தும், புள்ளிகள் பொலிந்த உடலும், சிறுத்த இடையும் குறுகிய வாலும் நீண்டுமெலிந்த கால்களுமுடைய மான்கள் பல காட்டில் திரிந்தன— என்னுங்கால், எந்த மானையும் குறிப்பாகக் கொள்ளாமல், பொதுப்பட மானினத்தையே வருணிப்பதால், இதனைச் சாதித் தன்மை என்று அழைக்கலாம்.

மீண்டும், "கிளைபரந்த......கால்களுமுடைய ஒரு மான், வேட்டைக்குச்சென்ற வேந்தன்முன் தோன்றியது" என்னுங்கால், ஒரு குறித்த மான் இங்கு அதன் தோற்றம்பற்றி வருணிக்கப்படுவதால் இது பொருட்டன்மை ஆவது இயலும். அலைபோல் புரள்கின்ற கண்களும் நெறித்த காதும் உடையதாய்அம்மான் அவனை வெருவி நோக்கியது—என்னுங்கால், வேடனைக்கண்ட அம்மானின் மனத்தெழுந்த அச்சத்தை வருணிப்பது கருத்தாதலின் இங்கு இதனைக் குணத்தன்மை என்னல் பொருந்தும்.

இனி, அவ்வேடனைக்கண்ட அம்மானனது, "கண்கள் அலைபோற் புரளக் காதுகளை நெறித்து ஓடியது" என்னுங்கால், மான் வேடனருகு நிற்காமல் ஓடியதென்பதை உணர்த்துதலே நோக்கமாதலின் மீண்டும் அவ்வருணனையே தொழிற்றன்மையும் ஆதல் கூடும்.

எனின், தண்டியாசிரியருடைய பாகுபாடு ஐயத்திற்கு இடமாகின்றதெனினும், மேற்குறித்த வண்ணம் அதற்கோர் அமைதியுங் காணலாம் என நினைக்கின்றோம். இந்த ஐயம் பற்றித்தான், மாறனலங்காரம், முன்னே காட்டியிருக்கிறபடி, இவ்வணிக்குவேறுவகை பாகுபாடு கூறியிருத்தல் வேண்டும்.

வடமொழியில், போஜன், இவ்வணியை, தேசஸ்வபாவோக்தி, காலஸ்வபாவோக்தி, சக்தி ஸ்வபாவோக்தி, ஸாதனை ஸ்வபாவோக்தி, என வேறுநான்கு வகையில் பாகுபாடுசெய்திருப்பதும் கருதத்தக்கது.

---

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

7-ம் பத்து - 4-ம் தசகம்

[169-பக்கத் தொடர்ச்சி]

4-ம் பாசுரம்

நாளு மெழுநில நீருமெழ விண்ணுங்
கோளு மெழவெரி காலு மெழுமலை
தாளு மெழச்சுடர் தானு மெழவப்ப
னூளி யெழவுலக முண்ட வூணே.

குறிப்பு:-இப்பாசுரத்தில் ஆழ்வார், பகவான் யுகப்பிரளயத்தில் அண்டகோளங்களை ஸகல ஆவரணத்துடன் தாஹத்துக்கு மனிதர் நீரை உறிஞ்சிக் குடிப்பது போல விழுங்கினனென்கின்றார். மஹத்தான "ஊளி" (தண்ணீரை மூச்சுப் பிடித்து உறிஞ்சும்) சப்தம் பகவான் அண்டங்களை விழுங்கும்போது உண்டானதாக ஆழ்வாரின் கவிதை.

உரை:—நாளும் - நாள் மாதம் வருஷம் முதலான காலவிபாகங்கள் ஒவ்வொன்றும், எழ - இல்லாமல் சூனியமாகப் போக, நிலம் - பூமியும், நீரும்- ஜலமும், எழ - நிலை குலைந்து போக, விண்ணும் - ஆகாசமும், கோளும்எழ- அங்காரகன், புதன், குரு, சுக்கிரன் முதலான எல்லாக் கிரகங்களும், திருவாதிரை சித்திரை முதலான எல்லா நக்ஷத்திர மண்டலங்களும் போக, எரி - நெருப்பும், கால் - காற்றும், எழ - தனித்தனியாக விளங்கக்கூடிய சக்தியற்றுப் போக, மலைதாளும் எழ - பூமியில் வேரூன்றினாற் போலப் பிரபல அடியிட்டுக் குவிந்து எழும் பர்வதங்கள் அடியோடு விழுந்துவிட, சுடர்தானும்எழ - சந்திர ஸூரியர்களில்லாமல் போக, ஊளி எழ - ஸர்வ அண்டங்களும் நிலைகெட்டுக் காற்றுத் தலம் இவையெல்லாம் ஏகரூபமாய் நீராகி நிற்கின்ற நிலையில் பகவான் அதை விழுங்க அஸாதாரணமாக உறிஞ்சிக் குடிக்கும் சப்தம், எழ - கோஷிக்க, அப்பன் - பரமோபகாரனை பகவானுக்கு, உலகம்-அண்ட ஸர்வ

ஸ்வரூபம், உண்ட - விழுங்குவதற்கு, ஊணே - இரையாயின. அதாவது பக்ஷணம்செய்யச் சோறும் பருகத் தண்ணீருமாயிற்று.

குறிப்பு:—யுக முடிவில் நித்தியப் பிரளயத்துக்குப் பிறகு எழுகின்ற சிருஷ்டியின் கிரமம் தைத்தரிய உபநிஷத்தில் "ஆகாசம் முதல் முதல் உண்டாயிற்று. ஆகாசத்தே நின்றும் வாயு, வாயுவினின்றும் அக்நி, அக்நியினின்றும் ஜலம், ஜலத்தினின்றும் பிருதிவி, பிருதிவியினின்று ஓஷதிகள், ஓஷதிகளினின்றும் அன்னம்" என்றுகும். லயத்தில் இவ்வரிசை மாறித் திரும்பி நேரும். இங்கு ஆழ்வார் திருவுள்ளத்தில் மஹாப் பிரளய அவஸ்தை மனனம் செய்யப்படுகிறதாகக் கொள்ளவேண்டும். இவ்வபிப்பராயத்திற்கு மற்றொரு ஹேதுவுமுண்டு. அதாவது வேதத்தில் ஆகாசம் காலம் இரண்டும் நிரந்தரமென்றும் அழிவதில்லையென்றும் அறுதியிடப்பட்டிருப்பதை எல்லா வேதாந்திகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றார். மேல் தேசத்துத் தத்துவசாஸ்திரிகளுக்கும் இதுவேதான் அபிப்பிராயம். ஆழ்வார் மாத்திரம் இப்பாசுரத்தில் வேறு மதம் கோருகின்றாரென்று எண்ணுவதைத் தவிர்த்து இங்கு மஹாப் பிரளயத்தின் ஸம்பவங்களை உரைப்பதாகக் கொள்வது உசிதம். அண்டங்கள் அந்தகாசமடைந்து அவற்றின் பகுதிகள் தத்தம் சூக்ஷ்மவிபாகங்களாகத் திரிந்தபிறகு, எல்லாக் கோள்களும் சென்ற பிறகு, எதைக்கொண்டு யார் என்ன காலவளவைக் குறிக்கக்கூடும். யுகாந்திர பிரளயத்தில் சில குறிப்பிட்டகாலத்துக்குப் பிறகு புநர்சிருஷ்டி ஏற்படுவதாகச் சாஸ்திரங்களில் தெரிகின்றபடியால் சிற்சில கோள்கள் நக்ஷத்திரமண்டலங்கள் ஜோதி மண்டலங்கள் Nebulae முதலியன நிற்பனவற்றிலிருந்து கால அளவை அறியக்கூடிய புண்ணிய புருஷர்கள் அறியலாம். வைகுண்டத்தில் அதாவது திருப்பாதவிபூதியில் இருந்து மோக்ஷமாகிற அமிர்தத்தை அநுபவிக்கிறவர்களுக்கு அறியக்கூடாதோ எனின், அங்கு ஸதா ஸ்வயம்பிரகாசமானதால் கால வரையறுப்பு என்ற பொருள் கிடையாதுபோலும்.

5-ம் பாசுரம்

ஊனுடை மல்லர் தகர்த்த வொலிமன்ன
ராணுடைச் சேனே நடுங்குமொலி விண்ணு
ளேனுடைத் தேவர் வெளிப்பட்ட வொலியப்பன்
காணுடைப் பாரதங் கையெறி போழ்தே.

ஊனுடைமல்லர் -மாம்சங்களைத் தின்று பெருத்தவர்; தகர்த்தஒலி-ஒருவரை மற்றொருவர் சண்டைக்கழைத்து எதிர்த்து ஆரவாரம் செய்த வொலி; மன்னர் ஆனுடைச்சேனை - யுத்தப் பயிற்சிசெய்து தயாராயிருப்பவர்; நடுங்கும் ஒலி - தோல்வி யடைவோமென்ற பயத்தால் அழுங்குரல். ஏனுடைய - விரல்வைத்து எண்ணக்கூடிய பிரம்மருத்திராதிகளும் மற்ற தேவர்களும். கிருஷ்ணபகவான் அணிவகுத்த பாரதப்போரை வியந்தாரென்று இப்பாசுரம் கூறுகின்றது.

6-ம் பாசுரம்

போழ்து மெலிந்த புன்செக்கரில் வான்றிசை
சூழு மெழுந்து திரப்புன லாமலை
கீழ்து பிளந்த சிங்கமொத்ததா லப்ப
ஞழ்துயர் செய்த வசுரரைக் கொல்லுமாறே.

குறிப்பு:—இப்பாசுரத்தில், பகவானின் நரஸிம்மாவதாரத்தை ஒரு திருஷ்டாந்தத்தால் வர்ணிக்கிறார்—"ஆழும் துயர் செய்து - ஸஹிக்கக்கூடாத தீவினைகளை உலகத்தாருக்கு இழைத்திய, அசுரரைக் கொல்லும் - [illegible] அசுரனைக் கொல்லுகின்ற, ஆறு - மாதிரி; உதாஹரணம் கூறுகின்றபடி - இவனைக் கொன்றது எதை ஒக்குமென்றால், பாசுரத்தில் வர்ணிக்கிறார்:—போழ்து மெலிந்த - ஸந்தியா[illegible] [illegible]

ஸந்தியாராகம் - (வர்ணம்) தோன்றும் வேளையில், வான் - ஆகாயத்தில், திசை சூழுமெழுந்த-எல்லாப் பக்கமும் பரவிய, உதிரப்புனலாம் - அசுரனின் மார்பைப் பிளந்தவுடன் அவன்ரக்தம் வெள்ளக்காடாய் ஒரு ஆறு அருவிகளுடன் ஓடுவதுபோலக் காணப்பட்டு, மலைகீழ்து - ஹிரணியனென அசுரன் மலைபோலக் கீழே சாய்ந்து; அப்பன் - பிரஹ்லாத பக்தனுக்கும் எல்லா உண்மையான பக்தர்களுக்கும் தந்தை போன்ற நம் பகவான், சிங்கம் ஒத்தான் - பர்வதத்தின்மேல் நிற்கும் சிங்கம்போல் துஷ்டநிக்ரஹனுக நரசிம்மாவதாரம் விளங்கிய தென்பது திருவுள்ளம்.

7-ம் பாசுரம்.

மாறு நிரைத் திரைக்குஞ் சரங்களின
நூறு பிணமலை போல்புர ளக்கடல்
ஆறு மடுத்துத் திரப்புன லாவப்ப
னீறுபட விலங்கை செற்ற நேரே.

குறிப்புக்கள்:-சரங்கள் நூறுநூறுகக் கூட்டமாய்ப் புறப்பட (இனம்-கூட்டம்), பிணம் மலைபோல்புரள-அசுர சரீரங்கள் இராமபாணத்தால் நூற்றுக்கணக்குகளாய் அடிபட்டு இறந்து இங்குமங்கும் சரமாரியால் புரட்டப்பட; கடல் உதிரப் புனலாக-இராக்ஷஸர்களின் தேகங்களிலிருந்து வழிந்து ஓடும் ரத்தப் பிரவாகம் தாங்காமல் எதிர் நோக்காய் ஆறுகளிலே வடிந்தமடையால்பாய, அப்பன் இலங்கையைச் சாம்பலாகும்படி அழித்ததினத்தில் என்ன சரமாரி நடந்தது என்றால்—இராமபிரான் நின்ற இடம் நிற்காமல் யுத்தகளத்தில் எல்லாத் திக்குக்களிலும் வெகு வேகமாய்ச்சுற்றிப் பாணங்களை விடாமழை பொழிவதுபோல்பொழிய ஒவ்வொரு விடுபட்ட சரமும் மற்றொரு சரத்தோடு தாக்கி எங்கும் சத்தமும் யுத்த ஆரவாரமும் அசுரர்களின் மரணவஸ்தையும் கேட்கப்பட்ட தென்கிறார்.

8-ம் பாசுரம்.

நேர்சரிந்தான் கோழிக்கொடி கொண்டான் பின்னும்
நேர்சரிந்தான் எரியு மனலோன் பின்னும்
நேர்சரிந்தான் முக்கண் மூர்த்தி கண்டீரப்பன்
நேர்சரி வாணன் திண்டோள் கொண்டவன்றே.

அப்பன் - உலகஇரக்ஷகனை ஸ்ரீ கிருஷ்ணபகவான், நேர்சரி-யுத்தத்தில் பகவான்முன்னே நின்று சண்டை செய்ய ஆண்மையில்லாமல் தன் ஸஹாக்களாய் அழைத்து வந்திருக்கும் சுப்பிரமணியக் கடவுள், அக்நி, ருத்திரபகவான் இவர்களை முன்னிட்டுத் தான் பின்நின்று பயப்பட்டவாணசுரன், திண்-மேல் கண்ட பக்கபலத்தாலும் அவர்கள் அநுக்கிரகத்தால் வரமளிக்கப்பட்டும் பலங்கொண்ட; தோள்-புஜங்களின் பலத்தை, கொண்டவன்றே-புஜங்களையறுத்து ஜெயித்த அந்தக் காலத்திலே நடந்த சரித்திரத்தை முதல் மூன்றடியால் விவரிக்கின்றார். கோழிக்கொடி கொண்டான் - கோழியைக்கொடியாகவுடைய சுப்பிரமணியஸ்வாமி, நேர் சரிந்தான்-நேரில் யுத்தத்தில்நிற்காமல் ஒதுங்கிநின்றான். பின்னும்-அதற்குமேல், எரியும் அனலோனும் - ஜ்வலிக்கா நின்ற அக்நிபகவானும் ஒதுங்கி நின்றான். முக்கண் மூர்த்தி கண்டீர் - திரிநேத்திரனை மூர்த்தி - திரிகால ஞானமுடைய பரமசிவ பகவானும், நேர்சரிந்தான் - உலக ஹிதத்தை நாடிப் பாணசுரனது ஆயிரம்தோள்களும் வெட்டப்பட்டன வென்று உணர்ந்து, நேர் சரிந்தான்-உலகங்களின் நன்மையையே உத்தேசித்து வாளாவிருந்துவிட்டார். கண்டீர் - இது வல்லவோ தத்துவமும் ஞானமும்!

9-ம் பாசுரம்

[illegible] மன்னி ரெரிகால் [illegible]
[illegible] பிறவும் [illegible]



மன்று மழையுயிர் தேவும் மற்றுமப்ப
னன்று முதலுல கம்செய் ததுமே.

அவதாரிகை:-இப்பாசுரத்தில் யுகப்பிரளயத்தின் பிறகு பகவான் தன் ஸ்வேச்சா ஸங்கல்பத்தாலே உலகங்களைச் சிருஷ்டிசெய்து நியமித்ததைப் புகழுகிறார். இதன் கருத்து யாதெனில், இவ்விசித்திர சக்தியுடையவனுக்கு, உலகங்களுக்குத்தீங்குவிளைக்குமசுரர்களைக்கொன்று அடக்குவதுஒரு பொருளோ வென்று காட்டுதல் நிமித்தம். 5-ம் பாசுரத்தில் பிரமாண்டகோடிகளையும் யுகாந்திர மஹாப் பிரளயத்தில் நிலைகுலைத்துத் தானே தம் திருவயிற்றில் வைத்து ரக்ஷித்த மஹாசக்தியைப் பிரஸ்தாபித்தார். இப்பாசுரத்தில் தேவதைகளையும் சந்திர ஸூரியர்களையும் எடுத்தது, ஸூரிய சந்திர வெப்பங்களால் மழைஉண்டாகிறது. ஸஸியங்கள் விளைந்து மனிதனை வளர்க்கிறது. அவனுக்கு அன்னம் கொடுக்கிறது. இந்த அன்னத்தைப் புஜித்து மனிதன் தேவதைகளுக்கு யாகஞ்செய்து ஹவிர்பாகத்தைக் கொடுக்கிறான். காலசக்கரத்தால் தேவர்களும் மனிதர்களும் பரஸ்பர உபகாரங்களை அடைகின்றார்களென்று பகவத்கீதையில் பகவான் வெளிப்படையாய்ச் சொன்னதை இங்குச்சேர்த்துப் படித்தால்தான் ஆழ்வாரின் நோக்கம் அறிந்துகொள்ளத்தகும். சிருஷ்டியின் கிரமம் சில புரண்டு கிடப்பதாக நினைக்கத்தக்கதல்ல. ஆகவே தைத்தரீய உபநிஷத்திலும் பகவத்கீதையுள் உள்ளதையும் சேர்த்து ஸமரஸமாக்கும்வண்ணம் அந்வியத்துக்கொண்டால் வேறுபாடில்லாமல் ஒக்கும்.

10-ம் பாசுரம்.

மேய்நிரை கீழ்புக மாபுர ளச்சுனை
வாய்நிறை நீர்பிளி றிச்சொரி யவின
வாநிரை பாடியங்கே யொடுங்க வப்பன்
தீமழை காத்துக் குன்ற மெடுத்தானே.

பொழிப்புரை:—பசுக்களும் இடையர்களும் கீழே புகுந்து பயமில்லாமல் திரியும்படியாகவும் மலைவாசிகளான நாற்கால்செந்துக்கள் எல்லாம் சஞ்சரிக்கும்படியாகவும், பூர்ண ஏரி குளங்கள் உள்ள பர்வதத்தைத் தலைபிடிப்பதாலே அதிக ஆரவாரத்துடன் தண்ணீர் புரண்டு கீழாகாதபடியாகவும், கோவர்த்தன மலையை எடுத்தருளி இந்திரன் ஏவிய தீய கேடுசெய்யும் மழையைத் தவிர்த்து இந்திரனை ஜெயித்தருளினன் உலக உபகாரார்த்தமாக அவதாரம் செய்த கிருஷ்ணபகவான்.

11-ம் பாசுரம்

குன்ற மெடுத்த பிரானடி யாரொடு
மொன்றி நின்ற சடகோப னுரைசெயல்
நன்றி புனைந்தவோ ராயிரத் துள்ளிவை
வென்றிதரும் பத்து மேவிக் கற்பார்க்கே.

குறிப்பு-I. ஸ்ரீ கிருஷ்ணபகவான் கோவர்த்தன்கிரியை யெடுத்தது யாதவர்களையும் பசுக்களையும் இந்திரன் ஏவிய வருஷகாள மழையினின்றுகாப்பாற்றின நோத்து அந்த ஸம்பவத்தில் ஆழ்வார் தாமும் அம்மலையின் சார்பில் அவற்றோடும் ஒதுங்கிநின்று ரக்ஷிக்கப்பட்டவராகக் கருதிப்பாசுரம்பாடப்பெற்றிருக்கிறது.

குறிப்பு—II. இது சடகோபன் உரை செயல் ஓராயிரத்துள்பத்து - சடகோபன் - ஆழ்வார் உரை செயல் - வாக்கு ரூபமான (செய்கை) குற்றேவல் கைங்கர்யம் ஒப்பில்லாத ஆயிரம் திருவாய்மொழி.

குறிப்பு—III. நன்றிபுனைந்த இப்பத்து மேவிக்கற்பாருக்கு வென்றி தரும் - பகவானை யோக நிஷ்டையில் பஜித்துப் பூஜிக்கிறவர்கள் நாலு பேர்கள் 1-ஐசுவரியம்வேண்டிப் பூஜிப்பவருக்கு அவ்வைசுவரியம் வரவொட்டாமல் தடுக்கும்பாபங்களை ஜெயித்து அவன்கோரும் பலனைக்கொடுக்கும் (11) பரிசுத்தாத்மசுவரூபமாகிற ஒருவாறன மோக்ஷஸுகத்தை விரும்புவோருக்கு அந்தப்பயன் கைவாராமல் தடுக்கும் பாபங்களை நசிப்பித்து வெற்றியைக் கொடுக்கும். (111) பக்தியோக உபாஸகர்களுக்குபக்தியோகத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்.

குறிப்பு —IV. ஆழ்வாரைப்போல் பகவான் திருவடிகளையே சரணமாகப்பூண்டு அவற்றையே அடைந்து அவனுக்கு உலக கைங்கரியங்களும் தொண்டுகளும்செய்யவேண்டுமென்று அபேக்ஷிப்பவர்களுக்கு ஷ்டி கைங்கரிய விரோதியான இடையூறுகளைவிலக்கி பூர்ணநுபவம் கொடுக்கும்.

குறிப்பு—V. இப்பத்து "நன்றிபுனைந்தது" என்கிறார். புனைகை - தொடுக்கை. இப்பத்து உலகரக்ஷணத்தின் பொருட்டு ஏற்பட்ட ஸர்வேசுவரனுடைய விசித்திர திவ்விய சேஷ்டிதங்களை அடைவு அடைவாகவே ஒன்றொன்றாய் விஸ்தரிக்கிறது என்றபடி.


# கலா நிலயம்

## முன்னைய வால்யூம்கள் இன்னும் சிலவே இருக்கின்றன, உடனே பெற்றுக்கொள்வது நலம்.

**1928, 1930, 1931, 1932, 1933, 1934 வருடத்தியவை கிடைக்கும்.**

| | | | |
|---|---|---|---|
| பைண்ட் செய்யாதவை—ஒவ்வொரு வால்யூமின் விலை ரூ. | 7 | 8 | 0 |
| ஆப்லெதர் கில்ட் பைண்ட் ,, | 9 | 0 | 0 |
| ஒரு வால்யூமை இரண்டு பாகமாகப் பிரித்துப் பைண்ட் செய்தது | 10 | 0 | 0 |

இந்தியாவிற்குள் இருப்பவர், இரயில்வே பார்சல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். பர்மா, ஸிலோன், மலேயா முதலிய இடங்களுக்குத் தபால் மூலமாகத் தான் அனுப்ப இயலும். இந்தியா பர்மா ஸிலோனில் உள்ள இடங்களுக்கு வால்யூம் ஒன்றிற்கு ரூ. 2-ம், மலேயா, தென்னுப்பிரிக்கா முதலிய வெளிநாடுகளுக்கு ரூ. 3-ம், தபால் பார்ஸல் சார்ஜ் ஆகும்.

இந்தியாவில் உள்ளவர் வேண்டிய வால்யூமின் விலையை அனுப்பித் தம்மூருக்கு அடுத்திருக்கும் இரயில் ஸ்டேஷனைத் தெரிவிக்கவும். அல்லது தபால் பார்ஸலில் பெற்றுக்கொள்ள விரும்பினுல், அந்தக் கட்டணத்தையும் சேர்த்து அனுப்பவும்.

வெளி நாடுகளில் உள்ளவர் வேண்டிய வால்யூம்களின் விலையையும் தபால் கட்டணத்தையும் சேர்த்து அனுப்புதல் வேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயல்வதில்லை.


192210
M711,N3?KW

KALANILAYAM
REG. NO. M. 2324

## வர்த்தமானம்

நாஷனல் இன்ஷுரன்ஸ் கம்பெனி:—இந்தக் கம்பெனியின் வருஷாந்த அறிக்கை வரப்பெற்ருேம். வருஷாவருஷம் இந்தக் கம்பெனி செய்கின்ற வர்த்தகத்தில் விருத்தியும் செலவின் குறைவும் மிகவும் பாராட்டத்தக்கன. பாலிஸிஹோல்டர்களின் இலாபத்தை நாடுவதையே தன் முதலான நோக்கமாக வைத்து நிற்கின்ற இந்தக் கம்பனி இப்படி விருத்தியடைந்து வருவது ஆச்சரியமல்ல. வருஷாந்தக் கூட்டத்தில் தலைமை வகித்த ஸ்ரீமான். ஜெ. சௌத்ரி கம்பெனியின் நிலைமையையும் அதன் வேலைத்திறத்தையும், பாலிஸிஹோல்டர்களிடத்தில் காட்டும் நியாயத்தையும், இன்ஷுயரன்ஸ் கம்பெனிகளின் விஷயமாகச் சட்டங்கள் பல திருந்தவேண்டி யிருப்பதன் அவசியத்தையும் மிகவும் செம்மையாகவும் தெளிவாகவும் எடுத்துக் காட்டியிருக்கின்ருர். அதனைப் படிக்கப் பயன் தரும்.

* * *

அமெரிக்காவில் மட்டும் கிறிஸ்தவமதத்தில் சுமார் 212 பிரிவுகள் இருக்கின்றனவாம்.

* * *

கடல் நீரில் செம்புச் சத்தும் நவச்சார உப்புச்சத்தும் கலந்திருப்பதால்தான் அது நீலமாயிருக்கிறதாம்.

* * *

மத்திய அமெரிக்காவில் ஒரு வருஷத்தில் ஆறு மாதமளவும் நாள்தோறும் ஓயாமல் இடி இடிக்குமாம்.

* * *

சில வால் நட்சத்திரங்கள் பூமியை விட 31 மடங்கும் சில 150 மடங்கும் பெரியனவா யிருக்கின்றனவாம்.

* * *

வானத்தினின்று விழும் எரி நட்சத்திரங்களிலிருந்து வெள்ளை வைரங்களும் கறுப்பு வைரங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றனவாம்.

* * *

நியூயார்க் நகரில் 4500 அழகுச் சாலைகள் இருக்கின்றன. அவற்றில் இருபதினுயிரம் பேர்வேலைசெய்கிருர்கள்.

* * *

இருட்டறையில் படுக்கையில் படுத்துக்கொண்டே புத்தகங்களை வாசிக்கக் கூடிய வெளிச்சந்தரும் மூக்குக் கண்ணுடி யொன்று லண்டன் நகரத்துக் கண் வைத்தியர் ஒருவர் கண்டு பிடித்திருக்கிருர்.

* * *

தங்கத் தவளை:—ஒரு பிரமாண்டமான விநோதத் தவளை லண்டன் மிருகக் காட்சிச்சாலையில் வந்திருக்கின்றது. இந்தத் தவளைக்குக் கண்விழிகள் தங்கம் போன்றிருக்கின்றனவாம். இத் தவளைக்குஇருகொம்புகளும் இருக்கின்றனவாம். இருகொம்புகள் இரு கண்கள் மீது இருக்கின்றன. இந்தத் தவளை கடிக்குமாம்.

உடம்பை மூடுவது எதுவானுலும் அதுவே உடை என்று அனேகர் எண்ணிவிடுவது போல, மனிதர் கண்களுக்குப் பொதுவாக எல்லா இன்ஷுயரன்ஸ் பாலிஸிகளும் ஒரே மாதிரியாகத் தோன்றலாம். ஆனுல், பகுத்தறிவும் அழகின் தரமும் தெரிந்தவர், உடை யெவ்வாறு தைக்கப் பட்டிருக்கின்ற தென்பதையும், அது நெடுங்காலமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தையற்காரர் இடத்திலிருந்து வருகிறதா வென்பதையுங் கவனிப்பார்கள். 'நாஷனல்' பாலிஸிக்கு இந்தச் சிறப்பு முத்திரை யிருக்கிறது. கல்கத்தாவில் ஹெட் ஆபீஸ் உடைய

**நாஷனல் இன்ஷுயரன்ஸ் கம்பெனி லிமிடட்**

கொடுக்கின்ற ஒவ்வொரு பாலிஸிக்கும் முப்பது வருடத்திய திறமை வாய்ந்த இன்ஷுயரன்ஸ் காரியானுபவம் ஆதாரமா யிருக்கிறது.

அஸ்ஸெட்ஸ் 2½ கோடிக்கு மேல்
நடைமுதல் பிஸினஸ் 10 கோடிக்கு மேல்

ஏஜென்ஸி எடுத்துக்கொள்ள விரும்புகின்றவர் கீழ்க்காணும் விலாஸங்களுக்கு எழுதவும்.

ப்ரான்ச் ஸெக்ரடரி, நாஷனல் இன்ஷுயரன்ஸ் பில்டிங், 362. சைனுபஜார் தெரு, சென்னை.

ஆர்கனைஸிங் ஸெக்ரடரி, ஸப் ஆபீஸ், 171. நியூ ஸ்ட்ரீட், மதுரை.

சீப் ஏஜன்ஸி, ஆர்காட் ஸ்ரீனிவாசார் தெரு, பெங்களூர் ஸிடி.

நெருப்பு மோட்டார் விபத்துக்கள்,

அஸ்ஸோஸியேடெட் நாஷனல் பையர் அண்ட் ஜனரல் இன்ஷ்யூரன்ஸ்கம்பெனியால் (லிமிடெட்) இன்ஷ்யூர் செய்யப்படும்.

**இண்டோ-கம்மர்ஷியல்**

**பாங்க், லிமிடெட்.**

**மாயவரம்**

சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு,
பஜார் பிராஞ்சு, 260. சைனுபஜார் ரோட்,

மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.

சப்-ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்

எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

**S. N. N. சங்கரலிங்க அய்யர்,**
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதருஸ்.

**சிறந்த பலவிருத்தி ஔஷதம்**

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

**32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1**

இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
26 பிராட்வே, மதராஸ்.

Printed at the B. N. Press, Mount Road, and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)